வானவில்

VAANAVIL

இதழ் 167 கார்த்திகை 2024

ISSUE 167 November 2024

# நொவம்பர் 14: மக்களுக்கான வாய்ப்பு!



இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்ற அமைப்பின் சார்பில் போட்டியிட்ட ஜே.வி.பி. கட்சியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க புதிய ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இலங்கையில் ஜனாதிபதி ஒருவர் தெரிவாவதிற்குத் தேவையான ஆகக்குறைந்த 51 சதவீத வாக்குகளை அனுர குமார பெறாது 44 வீதம் மட்டுமே பெற்ற போதும், போட்டியிட்டவர்களில் அதிகக்கூடிய வாக்குகள் பெற்றவர் என்ற வகையில் அவர் ஜனாதிபதியாகத் தெரிவானார். அந்த வகையில் அவரது தெரிவு அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதில் சந்தேகம் இல்லை.

தேசிய மக்கள் சக்தி என்பது, ஜே.வி.பி. இரத்தக்கறை படிந்த தனது கடந்தகால இருண்ட வரலாற்றை மறைப்பதற்காக போட்டுக்கொண்ட ஒரு முகமூடி என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். எனவே, சாராம்சத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது நிசத்தில் ஜே.வி.பி. அரசாங்கம்தான்.

பொதுவாக ஒரு புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டால் அதன் போக்கை அவதானிப்பதற்கு குறைந்தது ஆறு மாதங்களாவது தேவை என்பது ஒரு பொதுவான கருத்தாக உள்ளது. அந்தக் கருத்து அனுர குமாரவின் அரசாங்கததுக்கும் பொருந்தும். ஆனால், மக்களுக்கு ஆறு மாதங்கள் தேவைப்படாது போய்விட்டது. அனுர குமார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு ஒரு மாதத்திலேயே அவரது அரசாங்கத்தின் போக்கை மக்கள் இனம்காண ஆரம்பித்துவிட்டார்கள்.

ஜே.வி.பி. வேட்பாளர் தனது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது, நாட்டின் இரண்டு பிரதான பிரச்சினைகளான பொருளாதாரப் பிரச்சினை குறித்தோ அல்லது இனப்பிரச்சினை குறித்தோ, எவ்வித கருத்துகளையும் நாட்டு மக்கள் முன்னால் முன்வைக்கவில்லை.

மாறாக, கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த ஊழல்கள் பற்றியும், அதிகார துஸ்பிரயோகங்கள் குறித்துமே பெருமெடுப்பில் பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள். கடந்தகால ஆட்சியாளர்களின் தவறான பொருளாதாரக் கொள்கைகளினால் பாதிப்புக்குள்ளாகியிருந்த பொதுமக்கள் ஜே.வி.பி. மேற்கொண்ட பிரச்சாரத்தை நம்பி ஏற்றுக்கொண்டுதான் அவர்களது ஜனாதிபதி வேட்பாளருக்கு பெருமளவில் வாக்களித்து அவரை ஜனாதிபதி ஆக்கினார்கள்.

அத்துடன், தாம் ஆட்சிக்கு வந்தால் மக்களின் பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் தீர்க்கப்படும் என்றும், சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளுக்கு பூரணமான தீர்வு காணப்படும் என்றும், அவர்கள் செய்த பிரச்சாரங்களையும் மக்கள் நம்பினார்கள்.

ஆனால், அனுர குமார ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்துக்குள்ளாகவே அரிசி உட்பட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும் விலைகளும் கிடுகிடுவென அதிகரித்து வருகின்றன. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் அனுரவின் ஆட்சி திண்டாடி வருகின்றது.

தாம் ஆட்சிக்கு வந்தால் இலங்கைக்கு பாதகமாக சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய அரசினால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும் அல்லது மறுபரிசீலனை செய்யப்பட்டு இலங்கைக்குச் சாதகமாக மாற்றியமைக்கப்படும் எனவும் சொன்னார்கள். ஆனால், முன்னைய அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை அனுர அரசாங்கத்தாலும் அப்படியே தொடரப்படுகின்றது.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# 107 வருடங்களின் முன்னர் பலஸ்தீனியர்களை நாடற்றவர்களாக்கிய பிரகடனம்

77 வருடங்களாக இஸ்ரேல் – பலஸ்தீனப் பிரச்சனை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உலக வரைபடத்தில் இரண்டாம் உலகப் போருக்கு முன்பாக இஸ்ரேல் என்கிற ஒரு தேசம் கிடையாது. பலஸ்தீனம் உட்பட மேற்கு ஆசியப் பகுதிகள் 1517 முதல் 1917 ஆம் ஆண்டு வரை (முதலாவது உலகப்போர் வரை) துருக்கி ஓட்டமான் (Ottoman) பேரரசின் கீழிருந்தது. 19 ஆம் நூற்றாண்டு இறுதிவரை, இன்றைய இஸ்ரேல், பலஸ்தீனப் பகுதிகளில் 87 சதவீத இஸ்லாமியர்களும் 10 சதவீத கிறிஸ்தவர்களும் 3 சதவீத யூதர்களும் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

1896 ஆம் நூற்றாண்டில் ஹங்கேரியில் பிறந்த யூதப் பத்திரிகையாளர் தியடோர் ஹெர்ஷெல் (Theodor Herzl), என்பவர் 'யூதர்களுக்கு ஒரு தாயகம் வேண்டும்' என்கிற கருத்தாக்கத்தை வெளிப்படுத்தினார். இதுவே 'ஸியோனிசம்' என இன்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கருத்தாக்கம் ஐரோப்பாவில் வசித்த யூதர்கள் பாகுபாட்டை எதிர்கொள்ளவும் இன அழிப்பைச் சந்திக்கவும் வழிவகுத்தது.

முதல் உலகப் போரின் முடிவில் ஓட்டமான் ஆட்சி வீழ்ந்தது. அதன்பின்னர் பலஸ்தீனம் பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சியின் கீழ் 1948 வரை இருந்தது. அக்காலகட்டத்தில் 1917 நவம்பர் 2ஆ திகதி 'யூதர்களுக்குத் தனித் தாயகம்' என்கிற பால்ஃபோர் (Balfour) பிரகடனத்தை பிரித்தானியா அறிவித்தது.

1916 – 1919 இல் பிரித்தானியாவின் வெளியுறவுச் செயலாளராக இருந்த ஆர்த்தர் பால்ஃபர் (Arthur Balfour), பிரித்தானியா யூதர்களின் பிரதிநிதிகளில் ஒருவராக இருந்த வோல்டர் ரோத்ஷில்ட் (Walter Rothschild) என்பவருக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தார். அதில், "பலஸ்தீனத்தில் யூத மக்களுக்கான ஒரு தாய்நாட்டை நிறுவுவதை பிரித்தானியா முடியரசு சாதகமாகக் கருதுகின்றது. இந்த இலட்சியத்தை அடைவதற்கான அனைத்து உதவிகளையும் முடியரசு செய்து கொடுக்கும்" என்று அவர் எழுதியிருந்தார். அதுவே, பிரித்தானியா அரசின் யூதர்களுக்கான கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்னாளில் இஸ்ரேல் என்கிற தேசம் உருவாவதற்கும், 'பலஸ்தீனப் பகுதியை இரண்டாகப் பிரிக்க வேண்டும்' என ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றியதற்கும், இந்த பால்ஃபர் பிரகடனமே காரணமாக அமைந்தது. 1948 ஆம் ஆண்டு மே 14ஆ திகதி பிரித்தானியா அதிகாரபூர்வமாக பலஸ்தீனத்திலிருந்து வெளியேறியது. அதற்கு அடுத்த நாளே இஸ்ரேல் என்கிற தேசம் உருவாவதாக அறிவிக்கப்பட்டது. இதனை பலஸ்தீன மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கு இரண்டு விடயங்களை நினைவில் கொள்வது அவசியம். ஒன்று, இதே காலகட்டத்தில் யூதர்கள் ஐரோப்பாவில் சந்தித்த ஒடுக்குமுறைகள். மற்றது, யூதர்களுக்கு பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும் இருந்த செல்வாக்கு.

இரண்டாம் உலகப் போரில் (1939 – 1945) ஹிட்லர் நடத்திய யூத இன அழிப்பு வேட்டையில் 60 இலட்சம் யூதர்கள் ஐரோப்பாவில் கொல்லப்பட்டனர். இந்த இன அழிப்புக்கு முன்னரிலிருந்தே பலஸ்தீனம் முழுமையாக பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் இருந்ததால், யூதர்கள் பலஸ்தீனத்தில் குடியேற ஆரம்பித்தனர். 1920 முதல் 1946 ஆம் ஆண்டு வரை ஏறத்தாள 4 இலட்சம் யூதர்கள் பலஸ்தீனத்தில் குடியேறினார்கள். ஐரோப்பிய யூதர்களால், அங்கு வசித்த யூதர்களைப் போல் அரபு மக்களிடம் இணக்கமாக இருக்க முடியவில்லை. ஒருகட்டத்தில் பலஸ்தீன அரபுக்கள், யூதர்களை எதிர்க்க ஆரம்பித்தனர். அவர்களின் கோபம் ஆட்சி செய்து கொண்டிருந்த பிரித்தானியர்கள் மீதும் திரும்பியது.

பால்ஃபர் எழுதிய அந்தக் கடிதத்தில் உள்ள மற்றுமொரு வாக்கியத்தையும் இங்கு நினைவுகூர வேண்டியிருக்கின்றது. அது, "பலஸ்தீனத்தில் வசிக்கும் யூதரல்லாத சமூகத்தினரின் சிவில் மற்றும் மத உரிமைகளுக்கு ஊறு விளைவிக்கும் எந்த ஒரு செயலையும் செய்யக் கூடாது" என்பதே. ஆனால், 1947 – 1949 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம், இஸ்ரேலியர்களால் 7,50,000 பலஸ்தீனியர்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டனர்.

1967 ஆம் ஆண்டு 6 நாட்கள் நடைபெற்ற போரின் விளைவாக காஸா, கிழக்கு ஜெருசலேம், மேற்குக் கரை, சிரியாவின் கோலன் குன்றுகள், எகிப்தின் சினாய் தீபகற்பத்தின் பெரும் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இன்று, பலஸ்தீன மக்களுக்கென மேற்குக் கரையையும் (இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு பகுதி) மற்றும் காஸா பகுதி (இஸ்ரேல் மற்றும் எகிப்தின் எல்லை) ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு துண்டுப்பகுதிகளுமே எஞ்சியுள்ளன. இஸ்ரேல், கடந்த 50 ஆண்டுகளில் மேற்கு கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் இலட்சக்கணக்கான குடியிருப்புகளை கட்டியுள்ளது. இப்போது கிட்டதட்ட 7 இலட்சத்துக்கும் அதிகமான யூதர்கள் இங்கே வாழ்கிறார்கள். சர்வதேச விதிகளின் படி, இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளில் கட்டப்பட்ட இந்த குடியிருப்புகள் சட்டவிரோதமானவை. ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடும் இதுதான். ஆனால் இஸ்ரேல் இதனை நிராகரித்து வருகின்றது.

107 ஆண்டுகளுக்கு முன்னர் பால்ஃபர் எழுதிய கடிதத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் என்ற நாடு இன்று அரபு மக்களின் நிலங்களை ஆக்கிரமித்தும், அம்மக்களை கொன்றும் வருகின்றது. பலஸ்தீனர்கள் வாழ்ந்த மண்ணில் உருவாக்கப்பட்ட இஸ்ரேல், பலஸ்தீனத்தை இன்னமும் ஒரு நாடாக அங்கீகரிக்கவில்லை. எனினும் ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீனத்திற்கு உறுப்பினரற்ற, பார்வையாளர் அந்தஸ்தை வழங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை நடத்திய வாக்கெடுப்பில், 146 நாடுகள் (ஐ.நாவில் மொத்தமாக 193 உறுப்பு நாடுகள் உள்ளன) பலஸ்தீனத்திற்கு ஐக்கிய நாடுகள் உறுப்புரிமை வழங்க வேண்டுமென்பதற்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. ஆனால் இத்தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் அங்கீகரித்தால் மாத்திரமே, பலஸ்தீனத்திற்கு ஐ.நாவில் உறுப்பினர் அந்தஸ்து கிடைக்கும். ஐ.நா. பாதுகாப்புச்சபையிலுள்ள அமெரிக்கா கண்மூடித்தனமான இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதால், பலஸ்தீனத்திற்கான ஐ.நா. உறுப்புரிமை மறுக்கப்பட்டு வருகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இஸ்ரேலுக்கு வழங்கிவரும் நிபந்தனையற்ற ஆதரவினை விலக்கிக்கொண்டால் மாத்திரமே, பலஸ்தீனமக்கள் மீதான இஸ்ரேலின் ஒடுக்குமுறையை நிறுத்தி, பலஸ்தீனமக்களுக்கான சுதந்திர அரசொன்றினை நிறுவலாம்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# நவம்பர் புரட்சி ஒரு கையேடு



உலகில் எத்தனையோ ஆட்சி மாற்றங்கள், புரட்சிகள் 1917 இற்கு முனனர் நிகழ்ந்துள்ளன. இவை அனைத்தும் சிறுபான்மையினராக, ஆளுகிற, உடைமை வர்க்கங்களுக்கான மாற்றங்கள். முதன்முறையாக பெரும்பான்மையினரான உழைக்கும் வர்க்கங்கள் ஒன்று சேர்ந்து நிகழ்த்திய வெற்றிகரமான புரட்சி, நவம்பர் புரட்சி. 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற மாற்றம்!

அதற்கு முன்பு தொழிலாளி வர்க்கம் நிகழ்த்திய புரட்சிகர மாற்றம் பாரீஸ் கம்யூன் (1871). ஆனால் அது 72 நாட்கள் மட்டுமே நீடித்தது, வெற்றிபெறவில்லை. காரணம், விவசாயி வர்க்கத்தை அணி திரட்டாமல், அதன் பங்கேற்பின்றி நிகழ்த்தப்பட்டதால், பாரீஸ் கம்யூன் நீடிக்கவில்லை. எதிர்ப்புரட்சி வெற்றி பெற்றது.

பாரீஸ் கம்யூன் படிப்பினையை லெனினும், ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியும் கிரகித்து, தொழிலாளி – விவசாயி ஒற்றுமையே புரட்சியின் அடித்தளமாக அமைத்து, வெற்றிகரமான சோஷலிஸ்ட் புரட்சியை நிகழ்த்தினர். ஜார் மன்னனுக்கு எதிராக நீண்ட நெடிய போராட்டங்கள் நடத்தப்பட்டு 1917 பெப்ரவரி புரட்சி மூலம் மன்னராட்சிக்கு முடிவுகட்டப்பட்டது.

1. முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் அலெக்ஸாண்டர் கெரன்ஸ்கி (Alexander Kerensky) என்பவர் தலைமையில் முதலாளித்துவ அரசை நிறுவினர், சோவியத்துக்கள் எனப்படும் ஸ்தல ஆட்சி அமைப்புக்களில் விவசாயிகள், தொழிலாளர்கள் பிரதிநிதிகளான கம்யூனிஸ்டுகள் பொறுப்பு வகித்தனர். இரட்டை அரசாங்கம் நிலவியது.

2. முதல் உலகப்போரினால் ரஷ்ய ஏகாதிபத்தியம் பலவீனமடைந்த சூழலில் இராணுவத்தின் பெரும்பகுதி கம்யூனிஸ்டுகளிடம் வந்த நிலையில் புரட்சி நிகழ்ந்தது.

3. நிலைமைகளைத் துல்லியமாக கணக்கெடுத்து, சரியாகத்திட்டமிட்டு கம்யூனிஸ்டுகள் லெனின் தலைமையில் செயல்பட்டனர். பாட்டாளி வர்க்கப் புரட்சி, அன்றைய தற்காலிக முதலாளித்துவ அரசாங்கத்தை வீழ்த்தி வெற்றி பெற்றது.

4. சர்வதேச சூழலையும், தேசிய நிலைமைகளையும் ஆய்வு செய்த லெனின், முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டமாக மாறியதை கண்டறிந்தார். ஏகாதிபத்திய சங்கிலியில் பலவீனமாக இருக்கும் கண்ணியை உடைத்தெறிந்து புரட்சியை நிகழ்த்தலாம் என்ற அரிய தத்துவார்த்தப் பங்களிப்பு. லெனின் மார்க்சியத்தை மாறிய சூழலில் பொருத்திப் பார்த்து வந்தடைந்த இந்த முடிவு, ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டது.

5. பாட்டாளி வர்க்கப்புரட்சியின் அச்சாக தொழிலாளி விவசாயி வர்க்கங்களின் உறுதியான அணி அமைக்கப்பட்டது.

**என். குணசேகரன்**

6. தொழிலாளி வர்க்கம் தன்னை புரட்சியின் முன்னணிப் படையாக உயர்த்திக் கொண்டதால்தான் புரட்சி சாத்தியமானது. சுரண்டல் அமைப்பைத் தகர்த்து, கரண்டலற்ற சோசலிச அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற புரட்சிகர தத்துவார்த்த உணர்வு தொழிலாளி வர்க்கத்திற்கு ஏற்படுத்த வேண்டும்.

7. ஸ்தாபனபூர்வமாக தொழிலாளி வர்க்கத்தை திரட்டிடல் வேண்டும்.

விவசாயிகள் உள்ளிட்ட இதர வர்க்கங்களின் நலன்களுக்காகவும் போராடுகிற வர்க்கமாக தொழிலாளி வர்க்கம் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். இதன் மூலமே புரட்சிப்படையின் தலைமைப் படையாக தொழிலாளி வர்க்கம் திகழ்ந்திட இயலும். ரஷ்யப் புரட்சியின் அனுபவம் இதுவே.

8. வலுவான கம்யூனிஸ்டு கட்சியை லெனின் உருவாக்கியதால்தான் புரட்சி சாத்தியமாயிற்று. அதற்கு முந்தைய காலக் கட்டங்களில் புரட்சிகர நடவடிக்கைகள், முதலாளித்துவத்திற்கு எதிராக ஜெர்மனி போன்ற நாடுகளில் நடைபெற்ற போதும், அவை பாட்டாளி வர்க்க அரசு அமைவதற்கு வித்திடவில்லை. காரணம், புரட்சிகர கட்சி இல்லாததுதான்.

9. கட்சிக்கோட்பாடுகளை லெனின் மகத்தான சித்தாந்தப்போராட்டத்தின் மூலம் உருவாக்கினார். ஜனநாயக மத்தியத்துவம், கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு வெகுஜன அமைப்பில் பணியாற்றுவது உள்ளிட்ட பல கோட்பாடுகளை உருவாக்கினார். உருக்கு போன்ற உறுதியான கட்சி. ஸ்தாபனக் கோட்பாடுகள் அடிப்படையில் செயலாற்றிடும் கட்சியே புரட்சியை வழி நடத்திடும் என்பதே ரஷ்யப் புரட்சியின் அனுபவம்.

10. 1917 நவம்பர் 7 இல் நிறுவப்பட்ட புரட்சி அரசாங்கம் மாபெரும் சோதனைகளை சந்தித்தது. 14 நாடுகள் சுற்றி வளைத்து அரசை வீழ்த்த முற்றுகையிட்டன. இந்த ஏகாதிபத்திய நாடுகள், முதலாவது சோசலிச அரசுக்கு தொடர்ச்சியாக தடைகற்களையும் இன்னல்களையும் ஏற்படுத்தினர். இந்த தாக்குதலை முறியடித்து சோவியத் யூனியன் முன்னேறியது.

11. உழைப்பாளி வர்க்கத்தின் சொந்தக் காலில் நின்று ரஷ்யா முன்னேறியது. லெனின் பிறப்பித்த ஆணை விவசாய உற்பத்தி பல மடங்கு பெருகியது. உழுபவனுக்கு நிலத்தை சொந்தமாக்கியது. பின்னாளில் கூட்டுப்

பண்ணைகள் உருவாக்கப்பட்டு, விவசாய உற்பத்தி பல மடங்கு பெருகியது.

12. புரட்சிக்கு முன் கம்யூனிஸ்ட் கட்சி எழுப்பிய கோஷம் ‘சமாதானம், உணவு, நிலம்’ என்பது–இவை அனைத்தும் சோவியத் மக்களுக்கு சில வருடங்களுக்கு உள்ளாகவே சாத்தியமாயிற்று.

13. முதல் 5 ஆண்டு திட்டத்தின்போது மக்களின் வருமானம் 4 மடங்கு உயர்ந்தது. உற்பத்தி 15 சதவிகிதம் பெருகியது, மின்சாரம், எஃகு (உருக்கு) உற்பத்தியில் சாதனை. நவீன தொழில்கள் உருவாக்கப்பட்டது. வேலை, கல்வி அடிப்படை உரிமைகளாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போர் மூண்ட போது, பாசிசத்தை அழிக்க சோவியத் அரசு முன்னணிப் பங்கு வகித்தது. பாசிச இராணுவத்தை எதிர்த்து சோவியத் இராணுவம் மட்டுமல்ல, சோவியத் மக்களும் வீரஞ்செறிந்த போராட்டத்தை நிகழ்த்தினர்.

14. பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் தெருக்களில் எதிரிகளின் தாக்குதல் வரக்கூடும் என்பதால் ‘வீட்டிற்குள் இருந்து பூட்டிக்கொள்ளுங்கள்’ என்று ரேடியோவில் அறிவிக்கிறார். ஆனால் ஸ்டாலின் ஆங்காங்கே. மக்கள் கொரில்லாக் கொமிட்டிகளை அமைத்து பாசிச சக்திகளை வீழ்த்துங்கள் என்று அறைகூவல் விடுக்கிறார். சொந்த நாட்டின் மீதான தேசப்பற்று மட்டுமல்ல, உலக மக்களை பாசிச பிடியிலிருந்து மீட்க வேண்டுமென்ற ஒப்பற்ற சர்வதேச உணர்வும் சோவியத் மக்களிடம் இருந்தது, 2 கோடி மக்கள் உயிர்த் தியாகம் செய்து பாசிசத்தை வீழ்த்தியது.

**மனிதகுல வரலாற்றில் மறக்க முடியாத முத்திரை பதித்த நிகழ்வு**

○ உலகப்போருக்குப் பிறகு சிதைந்துபோன பொருளாதாரத்தை புனர் நிர்மாணம் செய்து மீண்டும் அசுர வேகத்தில் ரஷ்யா முன்னேறியது.

போரினால் இதர முதலாளித்துவ நாடுகள் மீளமுடியாத நெருக்கடியில் தேக்கமடைந்த நிலையில், ரஷ்யா பல துறைகளில் முன்னேறியது.

○ மக்களுக்கு கல்வி, வேலை, சுகாதாரம் அனைத்தும் உத்தரவாதமாக்கப்பட்டது, சோவியத் யூனியன் மக்களுக்கு செய்து வந்த சமூக நல நடவடிக்கைகள் ஏனைய முதலாளித்துவ நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களும் தங்கள் நாட்டு உழைப்பாளி மக்களுக்கு சில சமூக நல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

○ சோவியத்தின் தாக்கம் உலகம் முழுவதும் ஏற்பட்டது.

○ இரண்டாம் உலகப்போருக்குப் பின் பாசிசம் வீழ்ந்ததால், இந்தியா, இலங்கை உள்ளிட்ட காலனி நாடுகளில் விடுதலை கிடைத்தது.

○ சோவியத் சாதனைகளினால் ஈர்க்கப்பட்டவர்கள் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை நிர்மாணித்தனர், இதுபோன்று கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாகிடவும், சீனா உள்ளிட்ட பல நாடுகளில் புரட்சி ஏற்படவும் சோவியத் புரட்சி வழிகாட்டியாக அமைந்தது.

○ இந்த சாதனைகள் நிகழ்த்திய அரசு 1991 இல் வீழ்ச்சி கண்டது. காரணங்கள் CPI(M) இன் 14 ஆவது கட்சி காங்கிரசில் ஆராயப்பட்டு சில முடிவுகளுக்கு வந்துள்ளோம்.

○ 70 ஆண்டுக்காலம் சோவியத் அரசு இருந்தது. பல நூற்றாண்டுகளாக முதலாளித்துவம் அதுவரை நிகழ்த்தாத பல சாதனைகளை அது நிகழ்த்திய போதிலும், பல தவறுகள் இழைக்கப்பட்டதால் பின்னடைவு ஏற்பட்டது.

○ இதனால் சோசலிச தத்துவத்திற்கும், மார்க்சிய தததுவத்திற்கும் தோல்வி ஏற்படவில்லை. சோசலிசம் தான் உண்மையான மாற்று என்பதையும், முதலாளித்துவத்தால் அடிப்படை பிரச்சனைகளை தீர்த்திட இயலாது என்பதையும் கடந்த 10 ஆண்டு அனுபவங்கள் நிரூபித்துள்ளன.

○ ஏகாதிபத்தியங்கள் வலியுறுத்தும் தாராளமயமாக்கல் கொள்கை உலகம் முழுவதும் வறுமையை அதிகரிக்கச் செய்துள்ளது. பணக்கார நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடைவெளி அதிகரித்து வருகின்றது. உலகமயமாக்கல், தாராளமயமாக்கலை எதிர்த்து இந்தியா உள்ளிட்ட மூன்றாவது உலகநாடுகளில் மக்கள் இயக்கம் உருவாகி வருகின்றது. அமெரிக்காவிற்கு சாதகமான ஒருதலைபட்சமான உலகம் (Unipolor World) என்ற நிலைமைக்கு எதிர்ப்பு உருவாகி வருகிறது.

○ மார்க்சியம்–லெனினியம் ஒரு விஞ்ஞானம். விஞ்ஞானம் தவறாகாது. நடைமுறைப்படுத்துவதில்தான் தவறுகள் ஏற்பட்டன.

○ மனிதகுலம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் உள்ளிட்ட பல சமூக அமைப்புக்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கடந்து வந்துள்ளது. வரலாற்றில் குறுகிய கால பரிசோதனையாக சோசலிச அனுபவம் நேரிட்டது. வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் இது தற்காலிகமானது. மீண்டும் தொடரும், தவறுகளிலிருந்து படிப்பினை பெற்று புரட்சிகர இயக்கம் மேலும் முன்னேறும்.

○ எனவே, நவம்பர் புரட்சிகர அனுபவத்திலிருந்து படிப்பினைகளை பெற்றிடுவோம்,

○ தொழிலாளி, விவசாயி வர்க்கங்களை விரிவாகத் திரட்டி அணி சேர்த்திடுவோம்.

○ புரட்சிகர வெகுஜன கட்சியாக எங்களது கட்சியினை வலுவாக கட்டிடுவோம்.

○ ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் மக்கள் விரோதத் தன்மைகனை வெகுஜனப் போராட்டங்கள் மூலம அம்பலப்படுத்திடுவோம்.

○ மார்ச்சிய–லெனினிய தத்துவத்தை தொடர்ந்து பயின்றிடுவோம். மாறி வரும் குழ்நிலைமைகளை துல்லியமாக ஆய்வு செய்து நமது நடைமுறைப் பணிகளை மேற்கொள்வோம்.

○ நவம்பர் புரட்சியின் மகத்துவம் நீடுழி வாழட்டும்.

**சோசலிச அமைப்பு முறை என்றால் என்ன?**

“ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்காக முதலில் சோசலிசம் என்றால் என்ன? என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். இன்று, இலங்கையில், சோசலிசம் என்றால் உண்மையில் என்ன என்பது பற்றி அதிகமான குழப்பங்கள் நிலவுகின்ற காரணத்தால் இது அவசியமாகும்.

உற்பத்தி கருவிகளின் மீதான அரசின் கட்டுப்பாடோ அல்லது உற்பத்திக் கருவிகளை அரசுடமையாக்குவதோ கூட சோசலிசமாகாது. அரசு யாருடையது? என்பதே கேள்வியாகும்.

அரசு முதலாளித்துவ வர்க்கத்தினுடையதாக இருந்தால், அது முதலாளித்துவ சமுதாயமாகும். அரசு தொழிலாளி வர்க்கத்தினுடையதாக இருந்தால் மட்டுமே சமுதாயம் சோசலிச சமுதாயமாக இருக்க முடியும்”.

–தோழர் மு.கார்த்திகேசன் (1974 இல் கல்வி பற்றி எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து)

# இந்திய – சீன உறவுகளை இயல்பாக்கிட மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கை

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நடைமுறைக் கட்டுப்பாட்டில் உள்ள கோட்டினை (LAC - Line of Actual Control) ஒட்டி நடைபெற்றுவரும் ரோந்து ஏற்பாடுகள் தொடர்பாக (patrolling arrangements) ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக ஒக்ரோபர் 21 அன்று இந்திய அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. இது இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளை இயல்பாக்கிட இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு வரவேற்கத்தக்க வளர்ச்சிப்போக்காகும்.

2020 இல் கல்வான் (Galwan) பள்ளத்தாக்கில் எல்லை மோதல்கள் ஏற்பட்ட பின்னர் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே உறவுகள் சீர்கேடடையத் தொடங்கின. இந்த மோதல்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு முழு யுத்தமாக மாற இட்டுச் சென்றுவிடக் கூடாது என்பதை உறுதிப்படுத்திட, இரு நாடுகளுமே நடவடிக்கைகளை மேற்கொண்டன. 2020 இலிருந்து, இரு நாட்டின் இராணுவம் மற்றும் தூதரக நிலையில் 31 சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. இரு நாட்டின் இராணுவ கொமாண்டர்களும் (Corps commanders) இராணுவ அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்திய அதே சமயத்தில், இந்தியா–சீனா எல்லை விவகாரங்கள் தொடர்பான கலந்தாலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான நிர்வாக இயந்திரத்தின் (Working Mechanism for Consultation and Coordination - WMCC) கீழ் இராஜதந்திர அளவிலான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றன.

### அமைதியான உறவின் முக்கியத்துவம்

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் சுமூக நிலையை மீட்டெடுப்பதன் அவசியத்தை உணர்ந்த அரசியல் தலைமையின் தலையீட்டால் பேச்சுவார்த்தைகள் ஒரு தீர்க்கமான கட்டத்தை நோக்கி நகர்ந்தது. ‘இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் ஓர் உறுதியான மற்றும் அமைதியான உறவுகள் நீடிக்க வேண்டியது இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த பிராந்தியத்திற்கும் மற்றும் உலகத்திற்குமே மிக முக்கியம்’ என்று பிரதமர் மோடி இந்தியாவின் நிலைப்பாட்டை ஏப்ரலில் நடைபெற்ற கூட்டத்தின்போது பிரதிபலித்தார்.




இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் சீன வெளியுறவுத்துறை அமைச்சர், வாங் யியை இருமுறை சந்தித்துள்ளார். செப்டம்பரில், பிரிக்ஸ் மாநாடும், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர்கள் மாநாடும் ரஷ்யாவில், செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் நடைபெற்ற சமயத்தில் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான அஜித் தோவல், வாங் யியைச் சந்தித்துள்ளார். இதனைத் தொடர்ந்து இந்திய –சீன எல்லை விவகாரங்கள் தொடர்பான கலந்தாலோசனை மற்றும் ஒருங்கிணைப்புக்கான நிர்வாக இயந்திரத்தின் கூட்டங்கள் இரு முறை நடைபெற்றுள்ளன.

எனவே, ஜெய்சங்கர் கூறியிருப்பதைப்போல, இப்போது இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் என்பது, இரு நாடுகளும் மேற்கொண்ட மிகவும் பொறுமையான மற்றும் மிகவும் விடாமுயற்சியுடன் கூடிய இராஜதந்திரத்தின் விளைபொருளாகும். இதுவே நாடுகளுக்கு இடையே ஏற்படும் பூசல்களைத் தீர்ப்பதற்கான சரியான பாதையாகும். இந்த இராஜதந்திர முயற்சிகள் அனைத்தும் ரஷ்யாவின் கசான் (Kazan) நகரில் ‘பிரிக்ஸ்’ உச்சி மாநாடு நடை பெற்றுவரும் சமயத்தில் அதனூடே பிரதமர் மோடி மற்றும் சீன ஜனாதிபதி ஜீஜின்பிங் இடையே இருதரப்பு சந்திப்புக்கு வழி வகுத்தது.

2020 ஆம் ஆண்டு எல்லையில் ஏற்பட்ட மோதலுக்குப் பிறகு இருநாட்டுத்தலைவர்களும் சந்தித்துக்கொள்வது இதுவே முதல்முறை என்பதால் இந்தச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இருதரப்பு உறவுகளை ஸ்திரப்படுத்தவும், மீண்டும் கட்டியெழுப்பவும் நடவடிக்கை எடுத்திட இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

### முதன்மை இறக்குமதி ஆதாரம்

இந்திய முதலாளித்துவம் எதிர்கொண்டுவரும் பொருளாதாரப் பிரச்சனைகள், அதனை சீனாவுடன் வணிகம் செய்யும் திறனை எளிதாக்கிட, இந்திய அரசுக்கு நிர்ப்பந்தம் அளித்து வந்தது. இந்திய வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளின்படி, இந்த நிதியாண்டின் ஏப்ரல்–செப்டம்பர் காலத்தில் சுமார் 56.29 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருள்களை இறக்குமதி செய்யக் கூடிய அளவிற்கு இந்தியாவின் முதன்மையான இறக்குமதி ஆதாரமாக சீனா உருவெடுத்துள்ளது. உலகமயமாக்கப்பட்ட பொருளாதார உலக ஒழுங்கில், பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பது இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் என்பது அதிக அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்கள், ஸ்மார்ட்போன்கள், சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் சூரிய ஒளித்தகடுகள், மருந்துகள் முதலானவை உற்பத்தி

செய்திடும் ஓர் உற்பத்தி மையமாக (manufacturing hub) மாற்றுவதற்கு இந்திய அரசாங்கத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தத் தொழில்களில் பெரும்பாலானவற்றை மேற்கொண்டிட, சீனாவுடனான பொருளாதார உறவுகளை மீட்டெடுக்க வேண்டும். அரசாங்கமும், தனியாரும் இணைந்து கூட்டுத் துறைகள் மூலம் உற்பத்தித்துறையில் சீன முதலீடுகளை ஏற்பது தொடர்பாக தற்போது இருந்து வரும் எதிர்மறை நிலைப்பாடு மாற வேண்டும்.

2023 இல் இந்திய நிறுவனம் ஒன்றுடன் கூட்டுத்துறை மூலமாக மின் வாகனங்களை உற்பத்தி செய்திடும் சீனாவின் மாபெரும் நிறுவனமான பி.ஒய்.டி (BYD), ஒரு பில்லியன் டொலர் முதலீட்டுடன் முன்வந்தபோது, அது நிராகரிக்கப்பட்டதானது ஒரு குறுகிய பார்வையுடன் கூடிய செயல்பாடேயாகும். மின் வாகனங்களை உற்பத்தி செய்திடும் தொழிற்சாலையை அமைத்திருந்தோமானால், அது சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி நடைமுறைகளை இந்தியாவில் பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் உதவி இருக்கும். வேகமாக மாறிவரும் புவி–அரசியல் சூழல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை இயல்பாக்க வேண்டியதன் அவசியமும் உணரப்பட்டிருக்கின்றது.

உக்ரைனில் நடைபெற்று வரும் யுத்தம் மற்றும் காஸாவை இஸ்ரேல் ஆக்கிரமித்திடும் நடவடிக்கைகள், மேற்கு ஆசியாவில் பொருள்களை விநியோகம் செய்வதிலும், வர்த்தக மார்க்கங்களைப் பயன்படுத்துவதிலும் நாடுகளுக்கிடையே உறவுகளை மேம்படுத்திக் கொள்வதிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

### பிரிக்ஸில் இணைய விரும்பும் சவூதி அரேபியா, ஈரான்

அமெரிக்கா என்னும் கூடையில், அனைத்து நாடுகளும் தங்கள் முட்டைகளை வைப்பதனால் ஏற்படும் நச்சு விளைவுகளைத் தற்போது பல நாடுகள் உணர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் 'பிரிக்ஸ்' போன்ற நாடுகளின் கூட்டணி முக்கியத்துவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற கூட்டணிகளில் தங்கள் நாடுகளையும் இணைத்துக்கொள்ள பல நாடுகள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேற்கு ஆசியாவில் மிகவும் வல்லமை பொருந்திய நாடுகளாக விளங்கும் சவூதி அரேபியாவும், ஈரானும் இதில் தங்களையும் இணைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளில் ஏற்பட்டுள்ள புவி–அரசியல் மாற்றங்கள் காரணமாக, இந்தக் குழுவில் இந்தியா தனித்து இருக்க முடியாது.

2020 இல் சீன–இந்திய எல்லை மோதல்கள் ஏற்பட்டபின்னர், இந்திய அரசாங்கம் அமெரிக்காவுடனான தன் உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொண்டது. இந்தியா–சீனா சர்ச்சைக்குரிய எல்லை தொடர்பான நிகழ்நேர உளவுத்துறை பகிர்வு உட்பட பல்வேறு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவின் இமாலய எல்லையில் துருப்புக்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க 31 ஆயுதம் தாங்கிய காவல் டிரோன்களை (armed Guardian drones) இந்தியா வாங்குவதற்கு 3 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான ஒப்பந்தம் இதில் அடங்கும். அமெரிக்காவின் தலைமையில் அவுஸ்திரேலியா, ஜப்பான் உட்பட நான்கு நாடுகளைக் கொண்ட (குவாட்) கூட்டணியில் இந்தியாவும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கின்றது.

### 'ஓர்கனைசர்' ஏட்டின் கருத்து

மேலும், 2024 செப்டம்பர் 22 திகதியிட்ட ஆர்.எஸ்.எஸ் இன் ஏடான 'தி ஓர்கனைசர்' (The Organiser), அமெரிக்கா, ஆப்கானிஸ்தானத்திலிருந்து வெளியேறியிருப்பதையும், அதன் கொள்கை நிலைப்பாடுகளின் நம்பகத் தன்மையின்மையையும் சுட்டிக்காட்டி, இந்தப் பின்னணியில் இந்திய அரசாங்கம் சீனாவுடன் உறவுகளை இயல்பாக்கிக் கொள்வது விவேகமானதாக அமைந்திடும் என்று கூறியிருக்கின்றது. இந்தியாவும் சீனாவும் 3,400 கிலோ மீட்டருக்கும் அதிகமான நீளத்திற்கு ஒரு நீண்ட எல்லையைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. இதில் மிகப் பல இடங்களில் எல்லைகள் முறையாகப் பகிர்ந்து கொள்ளப்படவில்லை. இரு நாடுகளுக்கும் இடையேயான பிணக்கு நீண்டகாலத்திற்கு நீடித்துக் கொண்டிருப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணமாகும்.

இந்திய–சீன எல்லையில் நிலவும் பூசல்களுக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளைப் புதுப்பிப்பது தான் இப்போதைய தேவை. 1993 ஆம் ஆண்டு எல்லை அமைதி மற்றும் அமைதி ஒப்பந்தம் மற்றும் 2013 எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் மோடி அரசாங்கம், இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார உறவுகளையும் மற்றும் மக்களிடையேயும் பரிமாற்ற உறவுகளையும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும். அவற்றின் மூலம் உற்பத்தித் துறையில் முதலீடுகளைப் பெற கவனம் செலுத்திட வேண்டும். இவை இந்தியாவின் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் திறன்களை மேம்படுத்திட வழிவகுத்திடும்.

(இக்கட்டுரை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான Peoples Democracy இல் *27.10.2024* அன்று வெளிவந்தது. இதனை தமிழில் மொழிபெயர்த்தவர்: ச.வீரமணி)

---

மேலும் மேலும் சொத்தை தொழிலாளி உற்பத்தி செய்து, அவன் உருவாக்கியதன் அளவும் சக்தியும் கூடும்போது, அவன் மேலும் மேலும் ஏழையாகிறான்.

யந்திரத்தின் ஓர் இணையுறுப்பாகி விடுகிறான். எனவே, உற்பத்தி உலகில் தொழிலாளி தன் உழைப்பினால் உருவாக்கிய பொருளிலிருந்தும், உற்பத்திச் செயலிலிருந்தும், தன்னுடைய மனித சாரத்திலிருந்தும், பிற தொழிலாளிகளிடமிருந்தும் அன்னியமாகிறான்

**– கார்ல் மார்க்ஸ்**

---

தேசம் தழுவிய நெருக்கடி (சுரண்டப்படுவோர், சுரண்டுவோர் ஆகிய இரு சாராரையும் பாதிக்கும் நெருக்கடி) இல்லாமல் புரட்சி சாத்தியமன்று. இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், புரட்சி நடைபெறுவதற்கு, முதலாவதாக, பெரும்பான்மையான தொழிலாளர்கள் (அல்லது குறைந்தது, வர்க்க உணர்வு கொண்ட, சிந்தனை ஆற்றலுடைய, அரசியல் செயலாற்றல் வாய்ந்த தொழிலாளர்களில் பெரும்பாலோர்) புரட்சி இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்திருப்பதும், புரட்சிக்காக உயிர்விடத் தயாராயிருப்பதும் அவசியமாகும்.

**–லெனின்**

# வலுக்கும் ஈரான் - இஸ்ரேல் மோதல்



ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நசரெல்லாவையும் (Hassan Nasrallah) ஈரானிய புரட்சிப் பாதுகாப்புப்படையின் துணைத்தலைவரையும் இஸ்ரேல் குண்டுவீசி கொன்றதை அடுத்து இஸ்ரேலிய இராணுவ நிலைகளின் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

முன்பு சிரியாவிலுள்ள ஈரானிய தூதரக தாக்குதலுக்குப் பதிலடியாக சொல்லிவைத்துக் கொண்டு வாணவேடிக்கை காட்டிய ஈரான், இம்முறை இஸ்ரேலின் மீது இருநூறு ஏவுகணைகளை வீசி முக்கிய இராணுவ நிலைகளைத் தாக்கி, குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்தியது. இதுவரை அதுகுறித்த தகவல்களை வெளியிட விதிக்கப்பட்ட தடையை இஸ்ரேல் நீக்கவில்லை.

**ஈரானிய தாக்குதலில் அடிபட்ட இஸ்ரேல்**

முன்பு தொண்ணூறு விழுக்காடு ஏவுகணைகளை இடைமறித்த மேற்குலகம், இந்தமுறை தொண்ணூறு விழுக்காடு ஏவுகணைகளை இடைமறிக்கத் தவறியது. அடிபட்ட இஸ்ரேல் நிச்சயம் பதிலடி கொடுப்போம் எப்போதும் போல எதிரியை இருமடங்கு விலையைக் கொடுக்க வைப்போம் என்று அறிவித்தது.

இஸ்ரேலின் மீதான தாக்குதல் எங்களின் வலிமையின் ஒரு பகுதிதான் என்றும், மீண்டும் இஸ்ரேல் ஈரானைத் தாக்கும் பட்சத்தில் இஸ்ரேல் இதைவிட வலிமையான தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் என்றும் ஈரான் எச்சரித்தது. ஈரானின் அணு ஆராய்ச்சி மையம் அல்லது எண்ணெய் ஏற்றுமதி முனையங்களை இஸ்ரேல் தாக்கலாம் என்று செய்திகள் உலாவியது. அப்படியான தாக்குதலுக்கான தனது இசைவின்மையை அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்தார்.

இஸ்ரேல் ஈரானைத் தாக்கும்பட்சத்தில், தாக்குதலுக்குத் தமது வான்வெளியை அனுமதிக்கும் நாடுகளையும் தாக்குவோம் மற்றவர்களும் எரிபொருளை ஏற்றுமதி செய்யமுடியாது; அமெரிக்க இராணுவ நிலைகளும் தப்பாது என தொடர்ந்து அறிவித்து, தனது பதிலடி என்ன என்பதை ஈரான் தெளிவுபடுத்தி பின்வாங்க வைக்க முயன்றது. இதனிடையில் இஸ்ரேலின் தாக்குதல் திட்டத்தை ஈரானுக்குக் கசியவிட்டது அமெரிக்கா.

***பாஸ்கர் செல்வராஜ்***

இது இஸ்ரேலிய–அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவதாக இருந்தது. இறுதியாக, இஸ்ரேலிய தாக்குதல் நடக்கப்போவதை முன்னேரே அறியப்பெற்ற ஈரான், ஆயிரம் ஏவுகணைகளைத் தயார் நிலையில் வைத்து போருக்கு ஆயத்தமாக இருந்த அதேவேளை, தாக்குதலின் பாதிப்பு குறைவாக இருக்கும்பட்சத்தில் போரைத் தவிர்க்குமாறும் தனது இராணுவத்துக்கு ஆணையிட்டது.

**பதிலுக்கு ஈரானைத் தாக்கிய இஸ்ரேல்**

ஈரானிடம் இருப்பது போன்று நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் இஸ்ரேலிடம் இல்லை. இரண்டாயிரம் கிலோமீட்டர் தூரம் செல்லும் போர்விமானங்கள், ஜோர்டான், சிரியா, ஈராக், சவுதி அரேபியா நாடுகளின் வான்வெளியில் நுழையாமல் ஈரானைத் தாக்க முடியாது. செங்கடலைச் சுற்றிக்கொண்டு வந்து தாக்க இடையில் எரிபொருள் நிரப்ப சிறப்பு விமானங்கள் வேண்டும்.

சிரியா, ஈராக் வழியாக ஈரானிய இராணுவ உற்பத்தி நிலைகள் மீது எதிர்பார்த்தபடியே தாக்குதல் நடத்தியது, இஸ்ரேல். தலைநகரில் ஈரானின் அல்லது ரஸ்யாவின் S–300 அல்லது சமீபத்தில் ரஸ்யா ஈரானிய பாதுகாப்புக்கு அனுப்பி வைத்ததாகச் சொல்லப்படும் இதைவிட வலுவான S–400 ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் இஸ்ரேலிய ஏவுகணைகளை இடைமறிக்கும் காணொளிகள் அவற்றின் வலுவைக் காட்டுவதாக இருந்தது. அதனாலேயே அவற்றைக் குறிவைத்து இஸ்ரேல் தாக்கி இருக்கிறது.

அதில் அந்த எதிர்ப்பு அமைப்புகளை இயக்கிய நால்வர் இறந்ததாக ஈரான் அறிவித்து இருக்கின்றது. அது ஈரானின் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பின் ஓட்டைகளைக் காட்டுவதாக இருந்தது. இது தவிர்த்து ஈரானின் ஏவுகணை உற்பத்தி நிலைகளை அழித்திருப்பதாக இஸ்ரேல் கூறுகின்றது.

ஆனால் அப்படியான சேதம் விளைந்ததாக உறுதிப்படுத்தும் செய்திகள் இல்லை. இந்தத் தாக்குதலை பூமிக்கடியில் உள்ள இராணுவக் கண்காணிப்பு மையத்தில் அமர்ந்து பார்த்த இஸ்ரேலிய அதிபரின் முகத்தில் ஈயாடவில்லை. எதிர்பார்த்த அளவு தாக்குதல் வெற்றி பெறவில்லை போலிருக்கின்றது.

இப்படி ஒருவர்மாறி, ஒருவர்மீது தாக்குதல் நடத்துவதும், அது மேற்காசியப் போராக வெடித்து உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற அச்சத்தை ஊடகங்கள் கிளறுவதும் வாடிக்கை ஆகியிருக்கின்றது. ஒவ்வொரு தாக்குதலின் போதும் இராணுவ தொழில்நுட்ப அரசியல் நகர்வுகள் குறித்த தகவல்களைத் திரட்டி கட்டுரை எழுதுவதும் அடிப்படையில் எந்த பலனும் அற்றது.

நாள்தோறும் காஸாவை ஆக்கிரமித்திருக்கும் இஸ்ரேலிய இராணுவத்தை வெளியேற்ற ஹமாஸ் ஓரிருவரைக் கொல்வதும், பதிலுக்கு ஹமாசை ஒழிக்கிறேன் பேர்வழி என்று இஸ்ரேலிய போர்விமானங்கள்

குண்டுவீசி கொத்துக்கொத்தாக மக்களைக் கொல்வதும் அன்றாட நிகழ்வாக மாறியிருக்கின்றது. இப்படி அணையா நெருப்பாக காஸாவில் ஓராண்டாகத் தொடரும் இந்தப்போர் எப்போது முடியும் என்ற அயர்ச்சி கலந்த கேள்வி எல்லோரின் முன்னும் நிற்கிறது. இதற்கான சுருக்கமான விடை போரின் நோக்கத்தை அடையும்வரை போர் ஓயாது என்பதுதான். எனில் போரின் நோக்கம்தான் என்ன?

**போரின் நோக்கம்**

ஐக்கிய நாடுகள் சபையில் பேசிய இஸ்ரேலின் பிரதமர் நெதன்யாகு இஸ்லாமிய எதிர்ப்பியக்கத்தைச் சாபம் என்றும், இஸ்ரேல் வழியான இந்தியா–மத்தியக்கிழக்கு–ஐரோப்பிய பொருளாதாரத் தடத்தை (ஐ.எம்.இ.சி IMEC) வரம் என்றும், இரு வரைபடங்களைக் காட்டி போருக்கான காரணத்தையும் நோக்கத்தையும் தெளிவுபடுத்தினார். இந்தப்போர் அடிப்படையில் எரிபொருள் மற்றும் வணிக பாதைகள் தொடர்பானது என்பது பலருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

கடந்த வருடம் ஒக்ரோபர் 7 ஹமாஸ் தாக்குதலின் போதே, இது சீனாவின் ஒ.பி.ஓ.ஆர் (OBOR) மற்றும் ரஸ்யாவின் ஐ.என்.எஸ்.ரி.சி (INSTC) வணிகப்பாதைகள் ஈரான் வழியாக செல்வதற்கு மாற்றாக, அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்ட ஐ.எம்.இ.சி (IMEC) திட்டத்திற்கு எதிரானது; அதனைத் தடுத்து பலஸ்தீன நாட்டு உருவாக்கக் கோரிக்கையை உலகின்முன் கொண்டுவந்து, தனிநாடு அமைவதை உறுதிசெய்யும் நோக்கம் கொண்டது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டது.

ஏனெனில் போர் ஏதோ கோபத்தில் கண்ணை மூடிக்கொண்டு களத்தில் இறங்கி எதிரியை அடித்து நொறுக்கும் காரியமல்ல. போர் ஆயுதத்ததின் வழியாக முன்னெடுக்கப்படும் அரசியல். முக்கிய பொருளாதார நலனை நோக்கமாக வரையறுத்துக் கொண்டு அதனைக் கைப்பற்றுவதையோ, கைப்பற்றியதைக் காப்பாற்றுவதையோ இலக்காகக் கொண்டு அதனை அடையும் செய்முறை மற்றும் வழிமுறைகளை வகுத்துக் கொண்டு, நாட்டைத் தன்பின்னால் அணிதிரட்டி உயிர்களைப் பலிகொடுத்து இலக்கை அடையப் போராடுவது.

**வணிக வரலாறு**

இப்படி உயிர்களைப் பலிகொடுத்து மேற்காசியப் பகுதியில் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடக்கும் போர்களின் நோக்கம் ஒன்றுதான். ஆசிய, ஆபிரிக்கக் கண்டத்தின் வளங்களையும், அவற்றை ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு செல்லும் வணிகப் பாதைகளையும் கைப்பற்றிக் கட்டுப்படுத்துவதே அப்போர்களின் நோக்கமாகும். பயிரிடத்தக்க நிலம், எரிபொருள், கனிமவளம் உள்ளிட்ட இயற்கை வளம் குறைவாகப் பெற்ற ஐரோப்பா, இந்த இயற்கை வளமும் அவற்றைப் பொருள்களாக மாற்றும் மனிதவளமும் கொண்ட ஆபிரிக்க, ஆசிய கண்டங்களில் இருந்துதான் பெறவேண்டும்.

அப்படிப்பெற அந்தப் பொருள்கள் இக்கண்டங்களுக்கு இடையில் இருக்கும் மத்தியத் தரைகடலைத் தாண்டவேண்டும். ஆபிரிக்க கண்ட முனையில் எகிப்தும், ஆசிய கண்டமுனையில் துருக்கியும், இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையில் பலஸ்தீனம், இஸ்ரேல், சிரியா, லெபனான் நாடுகளும் இருக்கின்றன.

பண்டைய சிந்துவெளி, காவிரி, வைகை சமவெளி நாகரிக காலத்தில் பொருள்கள் இங்கிருந்து இம்மூன்று ஆறுகளின் வழியாக அரேபிய மற்றும் வங்கக் கடலை அடைந்து, அங்கிருந்து நாகரிகம் செழித்த எகிப்துக்கு செங்கடல் மற்றும் நைல் ஆற்றின் வழியாகச் சென்று மத்தியத் தரைக்கடலை அடைந்தன. அல்லது பாரசீக வளைகுடாவை அடைந்து அங்கிருந்து சுமேரிய நாகரிகம் செழித்த யூப்ரடீஸ் ஆற்றின் வழியாக மத்தியத் தரைக்கடலை அடைந்தன. அல்லது நிலவழியாக இந்தியா, சீனாவில் இருந்து ஆப்கானிஸ்தான், மத்திய ஆசிய நாடுகள், யூரேசிய எல்லைப் பகுதியில் உள்ள நாடுகள் வழியாக ஐரோப்பிய நாடுகளை அடைந்தன.

நிலம், நீர் ஆகிய இரண்டு வழிக்கும் ஈரான் முக்கியம் என்பதால், இந்த வணிகத்தின் முக்கிய புள்ளியாக ஈரான் இப்போதுவரை விளங்கி வருகின்றது. அதேபோலவே எகிப்து, துருக்கி, பலஸ்தீனம், லெபனான் நாடுகள் அன்று முதல் இன்றுவரை முக்கிய வணிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக இருந்து வருகின்றன. பொருள் வணிகத்துடன் இப்போது இந்தப் பகுதிகளில் குவிந்திருக்கும் எண்ணெய், எரிவாயு வளங்கள் உற்பத்திக்கு முக்கியமான தளத்தகை சரக்காக (strategic commodity) இருப்பது, இவற்றின் முக்கியத்துவத்தை மேலும் கூட்டி இருக்கின்றது.

**வணிகப்போர்களின் வரலாற்றுத் தொடர்ச்சி**

ஆக வரலாற்றிலும் சரி, இப்போதும் சரி, மேற்காசியப் பகுதியிலும் யூரேசியப் பகுதியிலும் நடக்கும் போர்கள் அடிப்படையில் ஆபிரிக்க, ஆசிய, ஐரோப்பிய கண்டங்களின் இயற்கை வளத்திற்கும் இந்தக் கண்டங்களுக்கு இடையிலான வணிகத்தைக் கட்டுப்படுத்துவதற்குமான போர்களாகவே இருக்கின்றன.

அன்றைய போர்களின் மையம் விவசாய உற்பத்திக்கு அடிப்படையான நிலமும் நீரும் அமையப்பெற்ற பகுதிகளும், அந்தப் பொருள்களைக் கொண்டுசெல்லும் வழிகளுக்குமானதாக இருந்தது. அன்றைய விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கும், அதனைக் கட்டுப்படுத்தும் ஆயுதங்கள் செய்வதற்கும் அடிப்படையான இரும்பு உற்பத்தியைக் கைக்கொண்ட கிரேக்க, ரோமப் பேரரசுகள் உலக ஆதிக்கம் பெற்றன.

இன்றைய ஏகாதிபத்திய காலகட்ட தொழிற்துறை உற்பத்திக் காலத்தில் உற்பத்திக்கான கனிமவளங்கள், தொழில்நுட்பங்கள், சந்தைபடுத்தும் நவீன வணிக, இராணுவ நுட்பங்கள் முக்கியமாக எரிபொருள் உற்பத்தி என அனைத்தையும் ஒருங்கே பெற்ற அமெரிக்கா உலக ஆதிக்கம் பெற்றது. அன்றைய இரும்பு உருக்குத் தொழில்நுட்பங்கள் ஏனைய நாடுகளுக்கும் பரவி பேரரசுகளின் பொருளாதார சுமைகூடி நலிந்தபோது, மற்றவர்கள் தனக்கான பங்கை அடைய அப்பேரரசுகளைத் தாக்கி உடைத்தார்கள்.

அதேபோல இப்போதும் இராணுவ, உற்பத்தி, தகவல் தொழில்நுட்பங்கள் பரவி அமெரிக்காவின் பொருளாதார சுமைகூடி நலிந்து நிற்கிறது. அன்றுபோலவே அவரவர் அடைந்திருக்கும் இயற்கைவளம், தொழில்நுட்ப வலிமையைப் பொறுத்து தனக்கான பங்கை அடைய, அமெரிக்க ஏகாதிபத்திய பேரரசை உடைக்க இன்றும் முற்படுகிறார்கள். அன்றைய பேரரசுகளைப்போல அமெரிக்கா தான் அடைந்த ஆதிக்கத்தை விடாமல் தக்கவைக்க இன்று போராடிக் கொண்டிருக்கிறது. அது

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# டொலர், பிரிக்ஸ் மற்றும் இலங்கை

பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ் (Professor Jeffrey Sachs) போன்ற சில முன்னணி உலகப் பொருளியலார்களின் கூற்றுப்படி, டொலர் பல்வேறு காரணங்களால் சிக்கலில் உள்ளது. சுமார் 37 டிரில்லியன் டொலர்களை கடன்பட்டுள்ள அமெரிக்கா, மிகப்பெரிய கடன்களை வாங்கும் நாடாக உள்ளது, இந்தக் கடன் அதன் தேசிய வருமானத்தில் 100% இற்கும் அதிகமானதாகும். மேலும் தனது தற்போதைய வெளியுறவுக் கொள்கையை, குறிப்பாக உக்ரைனிலும் மத்திய கிழக்கிலும், அத்தோடு அதன் செல்வச் செழிப்பைத் தக்க வைத்துக் கொள்ள பணத்தை அச்சிடும் அதன் நிதிக் கொள்கையையும் தொடர்ந்தால், அமெரிக்காவின் கடன் விரைவில் இரட்டிப்பாகும் என்று சாக்ஸ் கூறுகிறார்.

வரவிருக்கும் தேர்தல்களில் அதிகாரத்திற்கு வர போட்டியிடுபவர்கள் உட்பட, அமெரிக்காவின் ஆட்சியாளர்கள் ஆயுதத் தொழில்துறை மற்றும் பாதுகாப்பு நிறுவனத்தில் உள்ள கொள்ளைக்காரர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். அதனால் அவர்கள் நடந்து கொண்டிருக்கும் உலகளாவிய இராணுவ மோதல்களில் அதன் கொள்கையைத் தொடர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று சாக்ஸ் மேலும் கூறுகிறார். சர்வதேச பரிவர்த்தனைகளுக்கான டொலரை தங்கள் இருப்பு நாணயமாக வைத்திருக்கும் உலகின் மத்திய வங்கிகளின் எண்ணிக்கைகள் கடந்த சில ஆண்டுகளில் குறைந்துள்ளன. இது பொருளியலாளர்களின் கூற்றுப்படி டொலரின் பலவீனத்தின் அறிகுறியாகும். யென் (Yen) மற்றும் யுவான் (Yuan) போன்ற உலக நாணயங்களுக்கு எதிராக டொலர் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இது டொலர் சிக்கலில் உள்ளது என்ற கதையில் சில உண்மைகள் உள்ளன என்பதற்கு மற்றொரு ஆதாரமாகும்.

டொலரின் ஆதிக்கத்திற்கு சவால் விடும் மற்றொரு காரணி, பிரிக்ஸ் (BRICKS) அமைப்பின் வேகமான வளர்ச்சியாகும். தனது உறுப்பு நாடுகளிடையே பரிவர்த்தனைகளுக்கான நாணயமாக டொலருக்கு மாற்றுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது. ஐந்து



பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ்

நாடுகள் அதில் இணைந்து கொள்வதாலும், பல நாடுகள் சேர விண்ணப்பித்திருப்பதாலும் பிரிக்ஸ் சீராக வளர்ந்து வருகின்றது. பிரதான உலக நாணயமான டொலரின் ஆதிக்கம் மற்றும் டொலரை ஆயுதமயமாக்கும் அமெரிக்காவின் கொள்கை குறித்து பிரிக்ஸ் பிரத்தியேக கவலை கொண்டுள்ளது.

**என்.ஏ. டி எஸ்.அமரதுங்க**
**N. A. de S. Amaratunga**

டொலரின் சுழற்சியைக் கட்டுப்படுத்தும் திறனை அமெரிக்கா கொண்டிருப்பதனால், அமெரிக்காவின் மேலாதிக்க கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு கருவியாக டொலர் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, அமெரிக்காவின் எதிரிகளான ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுக்குச் சொந்தமான வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள பெரும் தொகை டொலர்கள், இந்த நாடுகளைத் தண்டிப்பதற்காக அமெரிக்காவால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது. உக்ரைன் மீதான பினாமி போருக்கு நிதியளிக்க ரஷ்யாவுக்கு சொந்தமான வங்கிக்கணக்குகளில் கிடைக்கும் வட்டிகளைப் பயன்படுத்த அமெரிக்கா முன்மொழிகின்றது. சக்திவாய்ந்த நாடான ரஷ்யா, இந்த அவமானங்களையும், பொருளாதாரப் போரையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், ஏனைய பிரிக்ஸ் நாடுகளுடன் சேர்ந்து டொலரின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

கொள்வனவு திறன் சமநிலை (Purchasing Power Parity - PPP) அடிப்படையில் பிரிக்ஸ் நாடுகளின் மொத்த தேசிய வருமானம் ஜீ7 நாடுகளை விட அதிகமாக உள்ளது. இந்த நாடுகள் இப்போது அதன் உறுப்பினர்களிடையே பயன்படுத்த ஒரு பொதுவான நாணயத்தை உருவாக்க முயற்சிக்கின்றன. மேலும் வங்கி சிக்கலை சமாளிக்க அவர்கள் தங்கள் பரிவர்த்தனைகளில் டிஜிட்டல் (digital) முறைகளை கையாளக்கூடும். பிரிக்ஸ் என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்கா ஆகியநாடுகளின் ஆங்கில முதலெழுத்துகளின் சுருக்கமாகும், மேலும் சமீபத்தில் எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம், ஈரான் மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகள் இந்த அமைப்பில் இணைந்தன. சவுதி அரேபியா அதன் கூட்டங்களில் கலந்து கொண்டு வருவதால், அது விரைவில் சேரக்கூடும்.

இந்த அமைப்பில் இணைய ஆர்வமாக உள்ள இலங்கை உட்பட தெற்குலக நாடுகளிற்கு மேற்குறிப்பிட்ட இந்த முன்னேற்றங்கள் முக்கியமானவை. இந்த ஆண்டு ஒக்ரோபர் 22-24 ஆம் திகதிகளில் திட்டமிடப்பட்டுள்ள அதன் அடுத்த கூட்டத்தில் (ரஷ்யாவிலுள்ள கசான் நகரில் நடைபெற்றது) இந்த விஷயத்தை முன்னெடுக்கக்கூடும். (குறிப்பு: இக்கட்டுரை ஒக்ரோபர் 15ந் திகதி வெளிவந்தது)

ஒரு பொதுவான நாணயம் அல்லது வர்த்தகத்திற்காக ஒரு கூடை பண்டங்கள் உருவாக்கப்படுமானால் இந்தியா, சீனா, ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளுடனான வர்த்தகத்தில் இலங்கை பெரிதும் பயனடையும். இலங்கை அதன் அத்தியாவசிய பொருட்களை வாங்க டொலர்களை கண்டுபிடிக்கப் போராடுகிறது. இந்த நாடுகளுடனான கொடுக்கல் வாங்கல்களை ஒரு பண்டமாற்று முறை அல்லது டொலரிலிருந்து சுயாதீனமான ஒரு மாற்று நாணயத்தின் அடிப்படையில் மேற்கொள்ள முடியுமானால், டொலர் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய முறைமையில் சாத்தியமில்லாத, கொள்வனவு திறன்

சமநிலையை முக்கியமாக அடிப்படையாகக் கொண்டால், டொலர்களை சம்பாதிப்பதற்கான இலங்கையின் போராட்டம் பெருமளவில் இலகுபடுத்தப்படும்.

இத்தகையதொரு அமைப்பை உருவாக்குவது குறித்த விவாதங்கள் வரவிருக்கும் பிரிக்ஸ் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் அதிகமாக இருப்பதாகத் தெரிகின்றது. பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் சுதந்திரமாக வணிகம் செய்ய ஏதுவாக, இந்நாடுகளின் பொருளாதாரத்தில் டொலர் விலக்கலுக்கு (Dedollarisation) முன்னுரிமை அளிக்கப்படும். ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகளுக்கு இத்தகையதொரு முறைமை, டொலரை ஓர் ஆயுதமாகவும் மேலாதிக்கத்திற்கான கருவியாகவும் பயன்படுத்துவதை மழுங்கடிக்க உதவும்.

மேலும், பலங்குன்றிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பது ரஷ்யா மற்றும் சீனாவின் வரையறுக்கப்பட்ட கொள்கையாகும். இதற்கு மாறாக, அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் இலங்கைக்கு கட்டளையிடும் அளவுக்கு, அமெரிக்காவும் ஐரோப்பாவும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றன. இலங்கை மக்கள் உயிர்வாழ்வதற்கு அவர்களைச் சார்ந்திருப்பதால், அவர்களால் அவ்வாறு செய்ய முடிகின்றது. அமெரிக்கா உலகின் முதலாவது சக்தியாக இருக்க விரும்புவது மட்டுமல்லாமல், ஏனைய நாடுகள் தங்கள் விவகாரங்களை எவ்வாறு கையாளுகின்றன என்பதையும் தீர்மானிக்க விரும்புகிறது. இந்த வகையான ஒட்டுமொத்த ஆதிக்கத்தை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பது தெற்குலகில் தோன்றியுள்ளது.

தெற்குலக மக்களை அடிமைப்படுத்துவது மாத்திரமல்லாது, அவர்களை ஏழ்மையில் தள்ளுவதாகவும் தோற்றமளிக்கின்ற டொலர் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய உலகப் பொருளாதார முறைமையிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள தெற்குலக நாடுகளிற்கு உதவ பிரிக்ஸ் விரும்புகின்றது. இலங்கையின் புதிய அரசாங்கம், உலகப் பொருளாதார அரங்கில் ஏற்பட்டு வரும் துரிதமான மாற்றங்கள், குறிப்பாக வளர்ந்து வரும் பிரிக்ஸ் அமைப்பின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு, இலங்கைக்கு உச்சபட்ச நன்மை கிடைக்க அதன் துரும்புச்சீட்டுகளை விளையாடுவது நல்லது. ஜீ7 நாடுகளை விட, பிரிக்ஸ் வளமானது என்பதால், இத்தகைய நடவடிக்கை எந்த அளவிலும் பாதகமாக இருக்காது.

(இக்கட்டுரை The Island பத்திரிகையில் வெளியானது. இக்கட்டுரைக்கான ஆதாரம்: பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸின் நேர்காணல்கள் – ஒக்ரோபர் 2024)

**தமிழில்: வானவில்**

# தேசிய மக்கள் சக்தி அரசால் வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது!

நாட்டின் உண்மையான பிரச்சினைகளை தேசிய மக்கள் சக்தி அரசால் புரிந்துகொள்ள முடியவில்லையாதலால் அதனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என, 'சர்வஜன பலய'வின் (Sarvajana Balaya) தலைவரும், அந்த கூட்டமைப்பின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளருமான டிலித் ஜெயவீர (Dilith Jayaweera) தெரிவித்திருக்கிறார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

தாம் ஆட்சிக்கு வந்தால் மின் கட்டணத்தை 40 சத வீதத்தால் குறைப்போம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களால் அது முடியவில்லை.

பெற்றோல் விலையை 200 ரூபா வரை குறைப்போம் என்றார்கள். ஆனால் வசதியானவர்கள் பயன்படுத்தும் ஒக்ரோன் (Octane) ரக பெற்றோல் மட்டும்தான் 95 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
தேங்காய் ஒன்றின் விலை 140 ரூபா வரை அதிகரித்துள்ளது. முட்டையின் விலையும் வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் தாறுமாறாக



ஏறியுள்ளது.

அவர்களால் தமது வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்ற முடியவில்லை. எதிர்காலத்திலும் ஒருபோதும் முடியாது.

அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமைக்குக் காரணம், பொருட்களின் உற்பத்திச் செலவு எவ்வாறு ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்ளாமல் இருப்பதுதான். அப்படியிருக்க அவர்கள் சந்தைகளுக்குச் சென்று நிலைபரங்களை அறிந்து கொள்வார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

நீண்ட காலத்துக்கு முன்பே தேசியவாதம் குறித்தும், தொழில்வாண்மை குறித்தும் நான் பேசியுள்ளேன். இப்பொழுது அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் டொனால்ட் ட்ரம்பும் அது பற்றிப் பேசுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கும் ட்ரம்பின் அனுபவங்களிலிருந்து இலங்கையர்கள் பெறுமதியான பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

சர்வஜன பலய வாக்குறுதிகளை வைத்து அரசியல் செய்யும் ஒரு அமைப்பல்ல. நாம் சாத்தியமாகக் கூடியவற்றை மட்டும் வைத்து அரசியல் செய்பவர்கள்.

இவ்வாறு டிலித் ஜெயவீர தமது தேர்தல் பரப்புரையின் போது குறிப்பிட்டார்.


சர்வஜன பலய என்ற அமைப்பு, முன்னர் சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையில் செயல்பட்ட சில கட்சிகள் அதிலிருந்து விலகி தோற்றுவித்த ஒரு அரசியல் கூட்டணியாகும். இந்தக் கூட்டணியின் தலைவராக பல தொழில் நிறுவனங்களின் தலைவரான டிலித் ஜெயவீர செயல்படுகிறார்.

இந்தக் கூட்டணியில் அங்கம் வகித்த ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதி தேர்தலின் பின்னர் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் சாய்ந்து விட்டார்.

இன்னொரு கட்சியான தேசிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச பொதுத் தேர்தலில் போட்டியிடுவதினின்று ஒதுங்கி விட்டார்.

தற்பொழுது இந்தக் கூட்டணியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, உதய கம்பன்பில தலைமையிலான பிவிதுரு ஹெல உருமய உட்பட சில கட்சிகளே அங்கம் வகிக்கின்றன.

# அணு ஆயுதப் போரின் கதிரியக்க மூடுபனி



அணு ஆயுதப் போர் நோக்கி நகர்கிறதா தற்போதைய உலக அரசியல் சூழல்? இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு முன்பு அணு ஆயுதப் போர் என்ன விளைவுகளை உண்டாக்கும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பூவுலகை 7 முறை முற்றிலுமாக அழிக்கும் அளவிற்கு வல்லமை படைத்த அணு ஆயுதங்கள் தற்போது உலகளவில் உள்ளன எனச் சொல்லப்படுகிறது.

குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா, ஃபிரான்ஸ், சீனா, இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வட கொரியா ஆகிய நாடுகள் மொத்தமாக 12,121 அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றன. இந்த அணு ஆயுதங்களை வைத்துள்ள இந்த நாடுகளுக்கு இடையிலான உறவு முரண்களுடன் இருப்பதால், உலக அளவில் அணு ஆயுதப் போர் மேகங்கள் சூழ்ந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி ஓர் அணு ஆயுத உலகப் போர் நிகழ்ந்தால், அது அணுக் கதிரியக்க மூடுபனிக் காலத்தை (Nuclear Winter) உருவாக்கும்.

இவ்வாறு அமெரிக்கா, ரஷ்யா இடையே அணு ஆயுதப் போர் நிகழ்ந்தால் என்ன விளைவுகள் உண்டாகும் என்பதை 'Nuclear War' என்ற புத்தகத்தில் விளக்குகிறார் அனி ஜாக்கப்சன் (Annie Jacobsen). அணு ஆயுதப் போரின் முதல் நொடி முதல் மாதங்கள் வரையிலான காலக்கட்டத்தை அமெரிக்கப் பார்வையில் இருந்து விளக்குகிறது இந்தப் புத்தகம். அணு ஆயுதத் தாக்குதல் அமெரிக்கா மீது நிகழ்த்தப்பட்டால், அதிபர் எப்படிக் காப்பாற்றப்படுவார் என்பதில் தொடங்கி, எதிர்த் தாக்குதல் எப்படி நடைபெறும் என்பது வரை இந்தப் புத்தகத்தில் சுவாரசியமாக விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகளுக்கு இடையே போர் உருவானால், 1 மெகா தொன் (1 மில்லியன் தொன்) திறன் கொண்ட 1,000 அணு ஆயுதங்கள் இரண்டு நாடுகளிலிருந்தும் வீசப்படலாம் என்று கூறுகிறார் அனி. அதன் பின்பு பூமி என்னவாக மாறும் என்பதை இறுதி அத்தியாயத்தில் விவரிக்கிறார்.

**மு.வெற்றிச்செல்வன்**

அணு ஆயுத வெடிப்பு நிகழ்ந்த சில விநாடிக்குள் பல இலட்சம் டிகிரி அளவிலான வெப்பம் வெளியாகும். கற்பாறை முதற்கொண்டு, இரும்பு, மரம் என எல்லாப் பொருட்களும் கரைந்து ஆவியாக மாறும். அடுத்த சில வினாடிகளில், புகைமண்டலம் 'காளான்' வடிவில் வெளி நோக்கி உயரும். வான் மண்டலம் எங்கும் புகையும், கதிரியக்கமும் நீக்கமெனப் பரவியிருக்கும். இவை சூரியக் கதிர்கள் பூமியின் வான் மண்டல எல்லையில் நுழைவதைத் தடுக்கும். பூமியின் தட்பவெப்ப நிலையில் $27^0$F ($-2.78^0$C) அளவிற்கு மாறுதல் உண்டாகும். பூமியின் வடதுருவப் பகுதி குளிர் மிகுந்த பகுதியாக மாறும். இளவேனில் காலம் கூடக் குளிர்காலமாக மாறும். இதைத்தான் 'கதிரியக்க மூடுபனிக் காலம்' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும், 10 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய குறுகிய உறைபனிக் காலத்தை உருவாக்கும் என்றும் கூறுகின்றனர்.

ஓசோன் படலம் மறைந்துபோகும். இதனைத் தொடர்ந்து ஊதாக் கதிர்கள் மக்களைக் கொல்லும். கண்ணாடி மற்றும் பிற எரிந்த பொருள்களின் சாம்பலில் இருந்து பலவித கொடிய நச்சுப் புகை பரவும். உயிர்ச்சூழல் தன் இயல்பை இழக்கும். உயிர்ப்பன்மை அழிந்துபோகும்.

குண்டுவெடிப்பு காரணமாக உடனடியாகப் பல கோடி மக்கள் இறந்துபோவார்கள். அதன் பின்பு, தொடர்ந்து வெளியாகும் அணுக் கதிரியக்கத்தால் தப்பிப் பிழைத்த உயிரினங்களும், மனிதர்களும் படிப்படியாக மரணிக்கத் தொடங்குவார்கள். அணு ஆயுதத் தாக்குதலில் நேரடியாக இறக்காதவர்கள் மரணத்தை நோக்கி இருப்பவர்களாக மாறுவர். மேலும், பயிர்கள் விளையும் சூழல் அழிந்திருக்கும். வேளாண்மையே இல்லாமல் போகும்.

அணு ஆயுதங்கள் குறைப்பு குறித்தோ, அழிப்பு குறித்தோ இந்தப் புத்தகம் பேசவில்லை. இரண்டாம் உலகப் போர் தொடங்கி அணு ஆயுத ஒழிப்பு குறித்துப் பேசப்பட்டு வருகிறது. குறிப்பாக, ரஸ்ஸல்–ஐன்ஸ்டைன் (Russell–Einstein) 09.07.1955 இல் வெளியிட்ட கூட்டறிக்கையைத் தொடர்ந்து இன்று அணு ஆயுத ஒழிப்பிற்கான செயல்பாடுகள் தொடர்கின்றன. இதன் பயனாகத்தான் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம், அணு ஆயுதச் சோதனைத் தடுப்பு ஒப்பந்தம் போன்றவை உருவாயின.

உக்ரைன்–ரஷ்யப் போர் காரணமாக இந்த ஒப்பந்தங்களில் இருந்து பின்வாங்குவதாக ரஷ்யா கூறியுள்ளது. ஈரானின் அணு உலை மையங்களில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டமிடுகிறது. இப்படிப் போர்ச் சூழலை நோக்கி நகரும் நிகழ்வுகளே உலகில் நடந்து வருகின்றன. அமெரிக்கச் செயல்பாடுகளின் காரணமாகவே இப்படிப் போர்ச் சூழல் உருவாகிவருகிறது. வியட்நாம் மீதான போரை எப்படி அமெரிக்க மக்கள் இயக்கம் முடிவிற்குக் கொண்டு வந்ததோ, அதுபோலான மக்கள் இயக்கம் மூலம் மட்டுமே போர்ச் சூழலைத் தணிக்க முடியும்.

அதனையும் மீறி மூன்றாம் உலகப் போர் நிகழ்ந்தால், கரப்பான்பூச்சிகள் போன்ற கதிரியக்கத்தை எதிர்கொள்ளும் ஆற்றல் படைத்த பூச்சிகள் மட்டுமே தப்பிப் பிழைக்கும். பூமி அவர்களின் வீடாக மாறும். பூவுலகு அடுத்த உயிரினங்களின் பரிணாமத்தைக் காணப் பல இலட்ச வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

# பொன்விழா கொண்டாட்டத்தின் பின்னாலுள்ள இருண்ட அத்தியாயம்!

**யாழ்ப்பாண** பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதின் 50ஆவது ஆண்டு நிறைவை, அதாவது பொன்விழாவை, அப்பல்கலைக்கழக சமூகமும், உலகெங்கும் வாழும் அப்பல்கலைக்கழகத்தின் நலன் விரும்பிகளும், அண்மையில் விமரிசையாகக் கொண்டாடினார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1974 யூலை 15ஆம் திகதி முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தொடக்கத்தை அப்போதைய பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்தத் தினமே பல்கலைக்கழகத்தின் ஆரம்ப தினமாக நினைவுகூரப்பட்டு வருகின்றது.

ஆனால், முதலில் இலங்கை பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் 1979 ஜனவரி 1ஆம் திகதி முதல் சுயாட்சியுடைய ஒரு முழுமையான பல்கலைக்கழகமாக செயற்படத் தொடங்கியது.

இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த 50 வருட காலத்தில் பல விதமான இடையூறுகள், சதிகள், சீர்குலைவுகள் என்பனவற்றைக் கடந்து இன்று நாட்டிலேயே சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக வானளாவ வளர்ந்து நிற்கின்றது. அது பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய ஒரு விடயம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இந்தப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துக்குப் பின்னால் நடைபெற்ற பல விடயங்களை இன்று பலர் மறந்துவிட்டார்கள் அல்லது அறியாமல் இருக்கிறார்கள்.

வரலாற்றுக் குறிப்புகளின்படி, இந்தப் பல்கலைக்கழகம் அமைவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே பல தமிழ் அறிஞர்கள் ஒன்றுகூடி தமிழ் பகுதியில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என அறிய முடிகிறது. ஆனால், ஏதோ சில காரணங்களால் அவர்களது முயற்சி கைகூடாமல் போய்விட்டது. அவர்களது முயற்சி கைகூடியிருந்தால், தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் எப்போதோ கிடைத்திருக்கும்.



பின்னரும் நீண்ட காலமாக தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் அமையாமல் போனமைக்கு தமிழ் அரசியல்வாதிகளின் அதிகாரப் போட்டியே காரணமாக அமைந்தது.

அதாவது தமிழர்களின் இருபெரும் அரசியல் கட்சிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும், இலங்கை தமிழரசுக் கட்சியும் இப்பல்கலைக்கழகப் பிரச்சினையை தமது அரசியல் ஆதாயத்துக்காக தமது கைகளில் எடுத்து விளையாடத் தொடங்கின.

**சுப்பராயன்**

ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழ் மக்களுக்குத் தேவையானது ஒரு இந்துப் பல்கலைக்கழகமே என்று வாதிட்டு வந்தது. அதே நேரத்தில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான தமிழசுக் கட்சி, தமிழ் மக்களுக்குத் தேவையானது ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமே என வாதிட்டு வந்தது. இவர்களது ஏட்டிக்குப் போட்டி காரணமாக தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கனவு நனவாகிக் கொண்டே போனது.

இதற்கிடையில், தமது தனித்தமிழ் நாட்டின் தலைநகராக அமையப்போகும் திரிகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கப் போவதாகக் கூறி தமிழரசுக் கட்சியினர் பொதுமக்களிடம் பெருந்தொகையான பணம் திரட்டியதுடன், அந்தப் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கென திரிகோணமலையில் பல ஏக்கர் நிலத்தையும் கொள்வனவு செய்தனர். ஆனால், அந்தப் பல்கலைக்கழகம் இன்றுவரை அமைக்கப்படவே இல்லை என்பதுடன், அதற்கெனத் திரட்டிய நிதிக்கும், கொள்வனவு செய்த நிலத்திற்கும் என்ன நடந்ததென்பதும், இதுவரை யாருக்கும் தெரியாது.

இந்த இரண்டு தமிழ் கட்சியினரும் 1965 இல் டட்லி சேனநாயக்க தலைமையில் அமைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழுகட்சி கூட்டரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும் கூட, தமிழ் மக்களின் பல்கலைக்கழக தேவையை நிறைவேற்ற லாயக்கற்றுப் போனார்கள். இவர்களது ஏட்டிக்குப் போட்டியான நிலையைக் கண்ட டட்லி அரசாங்கம், "நீங்கள் ஒருமித்த ஒரு கருத்துக்கு வரும் வரையில் தமிழ் பகுதியில் பல்கலைக்கழகம் அமைப்பது சாத்தியமில்லை" எனக்கூறி, சிம்மாசனப் பிரசங்கத்தின் போது அடையாள மானியமாக 10 ரூபா மட்டும் ஒதுக்கிவிட்டு தப்பித்துக் கொண்டது.

இந்தச் சூழ்நிலையில்தான் 1970 பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'மக்கள் கூட்டணி' அரசாங்கம் பதவிக்கு வந்தது. சிறீமாவோவின் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் அமைந்த இந்த அரசாங்கத்தில் இடதுசாரி கட்சிகளான லங்கா சமசமாஜ கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் அங்கம் வகித்தன.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழ்

பகுதிகளில் இருந்த இடதுசாரி கல்விமான்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தத் தொடங்கினர். அவர்களில் மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், வி.பொன்னம்பலம், எஸ்.சிவபாதசுந்தரம், எம்.பேராயிரவர், வித்துவான் க.ந.வேலன், அ.விசுவநாதன், டாக்டர் சு.வே.சீனிவாசகம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களது வேண்டுகோளை அந்த நேரத்தில் சிறீமாவோ அரசில் அமைச்சராக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் பீட்டர் கெனமன் அமைச்சரவைக்கு எடுத்துச் சென்று பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவினதும், கல்வி அமைச்சர் பதியுதீன் மொகமத்தினதும் இணக்கத்தைப் பெறுவதில் வெற்றி கண்டார்.

தமிழ் பகுதியில் உள்ள முற்போக்கு சக்திகளின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமையப் போகிறது என்பதை அறிந்து கொண்ட தமிழரசுக் கட்சியினர், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அதை எதிர்ப்பதென தீர்மானித்துக் கொண்டனர்.

அதற்கு அவர்கள் சொன்ன ஒரேயொரு காரணம், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைந்தால் சிங்களக் குடியேற்றமும் வந்துவிடும் என்பதுதான். ஆனால் அவர்களது இந்த சிறுபிள்ளைத்தனமான காரணத்தை தமிழ் மக்கள் எவரும் ஏற்கத் தயாராக இருக்கவில்லை.

தமிழரசுக் கட்சியினர் பல்கலைக்கழகம் அமைவதை எதிர்ப்பதன் பொருட்டு, பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாட்கள் வருகை தரவிருந்த பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் வருகையைப் பகிஸ்கரித்து இரண்டு நாட்களும் ஹர்த்தால் அனுட்டித்து துக்கதினமாக பின்பற்றுமாறும், மக்கள் எக்காரணம் கொண்டும் தமது வீடுகளை விட்டு வெளியே வரக்கூடாது எனவும் அறிவித்தனர்.

ஆனால், தமிழரசுக் கட்சியினர் அறிவித்ததிற்கு மாறாக சிறீமாவோவை வரவேற்பதற்காக அவர் சென்ற இடமெங்கும் மக்கள் வீதியின் இருமருங்கும் ஆயிரக்கணக்கில் கூடி நின்று வரவேற்புக் கொடுத்தனர். பல்கலைக்கழக திறப்பு விழாவிலும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கணக்கில் கலந்து கொண்டதுடன், அதைத் தொடர்ந்து அன்று மாலை யாழ்.விளையாட்டரங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்தனர். அதன் மூலம் தமிழரசுக் கட்சியினர் சிறீமாவோவின் வருகையை எதிர்த்து அறிவித்த ஹர்த்தால் புஸ்வாணமாகிப் போனது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தின் அமைவு அந்த வளாகம் அமைந்த திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியையும், மருதனார் மடத்தில் இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் (தற்பொழுது யாழ் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பரிவு அங்கு செயற்பட்டு வருகின்றது) நிறுவிய சேர்.பொன்.இராமநாதன் தம்பதிகளின் கனவை நனவாக்கியது என்று சொல்வது மிகையல்ல.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவராக பேராசிரியர் க.கைலாசபதி அவர்களை அரசாங்கம் மிகவும் பொருத்தமான முறையில் தேர்வு செய்திருந்தது. அவர் தமது புலமையையும் ஆற்றலையும் பயன்படுத்தி, பல்கலைக்கழகத்துக்குத் தேவையான மிகச் சிறந்த விரிவுரையாளர் குழாமை தேர்வு செய்ததுடன், பல்கலைக்கழகத்துக்குத் தேவையான நிர்வாக மற்றும் கல்விசார் கட்டமைப்புகளையும் திறம்பட உருவாக்கினர். அவர் போட்ட அந்த சாலையிலேயே இன்று பல்கலைக்கழகம் என்ற தேர் தொடர்ந்து நகர்ந்து செல்கிறது எனலாம்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் நினைவு கூர்வது அவசியம். அதாவது, தமிழரசுக் கட்சியினர் பொதுமக்கள் மத்தியில் கல்வி விரிவாக்கம் பெற்றுச் செல்வதை எதிர்த்தது இதுதான் முதல் தடவையல்ல. 1960இல் முதன்முதலாக பிரதமரான சிறீமாவோ பண்டாரநாயக்க, பொதுமக்களின் நன்மை கருதி இலங்கையில் இருந்த தனியார் பாடசாலைகளை (கூடுதலானவை கத்தோலிக்கப் பாடசாலைகள்) அரசுடமை ஆக்கிய போது, தமிழரசுக் கட்சி அதற்கென கொண்டுவரப்பட்ட சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து வாக்களித்தது.

இவ்வாறெல்லாம் செய்து கொண்டுதான், இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களை கல்வியில் புறக்கணிக்கின்றன என தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மத்தியிலும், உலக அரங்கிலும் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றது.

---

**8ம் பக்கத்தொடர்ச்சி…**

இஸ்ரேல்–ஈரான்–லெபனான்–பலஸ்தீனப் போராகவும், உக்ரைன்–நேட்டோ–ரஸ்யப் போராகவும் வெடித்து நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த இரண்டு போர்களையும், எந்தத் தொடர்புமற்றதாக உக்ரைனியப்போரை ரஸ்யாவின் ஆதிக்கப் போராகவும் அல்லது நேட்டோ அமெரிக்க நாடுகளின் ஆதிக்கப் போராகவும் நம்முன் கடை விரிக்கப்படுகிறது. அதேபோல, பலஸ்தீனப்போரை இஸ்ரேலின் பாதுகாப்புக்கான போராகவும் அல்லது அடாவடி ஆதிக்கப் போராகவும், ஈரானிய ஆதரவு தீவிரவாத இயக்கங்களின் தாக்குதலாகவும் அல்லது அவர்களின் விடுதலைக்கான போராகவும் தனித்தனியாகத் பிரித்துச் சொல்லப்படுகிறது.

ஆனால் இரண்டு போர்களுமே அடிப்படையில் அமெரிக்க ஆதிக்கத்தைத் தக்கவைக்கவும், அந்த ஆதிக்கத்தை உடைக்கவுமான போர்கள். அதன் நோக்கம் இன்றைய தொழிற்துறை உற்பத்திக்கு அடிப்படையான, எங்கும் கிடைக்காத எரிபொருள் கனிமவளங்களைக் கைப்பற்றவும், அவற்றைக் கொண்டு செல்லும் பாதைகளைக் கட்டுப்படுத்தவுமான போர்கள்.

ஆதிக்கத்தைத் தக்கவைக்க போராடும் அமெரிக்க–நேட்டோ அணிகளும், ஆதிக்கத்தை உடைக்க முற்படும் சீனா–ரஸ்ய அணியினரும் தங்களது நோக்கத்தை எட்டும்வரை இந்தப் போர்கள் முடியாது; தொடரும்.

---

உங்களுக்கு எதிரான சக்திகளிடம் அமைப்பு, கட்டுப்பாடு, தொடர்ச்சியான அதிகார பலம் ஆகிய எல்லாச் சாதகங்களும் உள்ளன. அவற்றை எதிர்த்து பலமான சக்திகளைக் கொண்டுவராவிட்டால் நீங்கள் முறியடிக்கப்படுவீர்கள், அழிக்கப்படுவீர்கள்.

**–ஃபிரெட்ரிக் ஏங்கெல்ஸ்**

முன்பக்கத்தொடர்ச்சி...

அதேபோல, தாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு பூரணமானதொரு தீர்வு காணப்படும் எனவும் சொன்னார்கள். ஆனால் அதற்கான ஒரு சிறு முயற்சியையும் அனுர அரசு எடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தமிழ் மக்களுக்கு பாரபட்சம் இல்லாமல் வேலை வாய்ப்பிலும் அபிவிருத்தியிலும் சம வாய்ப்பு வழங்கினாலே போதும் என, ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரிஸ்வின் சில்வா இப்பொழுது கூறி வருகிறார். அவர்களது தமிழ் மக்கள் சம்பந்தமான கொள்கைக்கு ஒரு உதாரணம், நொவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான தேசிய பட்டியலில் ஜே.வி.பி. வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஒரு தமிழரைக்கூட உள் அடக்காததை உதாரணமாகக் கூறலாம்.

தமது அரசாங்கத்தை தூய்மையானதாக வைத்திருப்பதற்கு முன்னைய அரசாங்கங்களில் ஊழல்களில் ஈடுபட்டவர்களையும், அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்களையும் தமது அரசாங்கத்தில் உள்வாங்க மாட்டோம் என்று சொன்னவர்கள், இப்பொழுது அதே நபர்களையே தமது அரசாங்கத்திலும் நிர்வாகிகளாக நியமித்து வருகிறார்கள். அத்தகையவர்களில் பேரினவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களும் அடங்குவர். அதேநேரத்தில் கண்துடைப்புக்காக தமக்கு வேண்டாத அதிகாரிகள் சிலருக்கு எதிராக மட்டும் சில நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள்.

ராஜபக்சாக்கள்தான் நாட்டைச் சீரழித்தவர்கள் என்றும், அவர்கள் கோடிக்கணக்கில் பணத்தைக் கொள்ளையடித்து வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்றும், தாம் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் அவ்வாறு பதுக்கிய பணத்தை மீட்டெடுத்து நாட்டுக்கு திரும்பவும் கொண்டு வருவோம் என தேர்தல் பிரச்சாரத்தின் போதும், அதற்கு முன்னரும் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் இப்பொழுதோ, தாம் அவ்வாறு ஒருபோதும் சொல்லவில்லை என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரிஸ்வின் சில்வா முழுப் பூசனிக்காயை ஒரு கவளம் சோற்றில் மறைக்க முயல்கிறார்.

தாம் அதிகாரத்துக்கு வந்தால், எந்தவொரு நபர் மீதும் அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ள மாட்டோம் எனச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பலரது பதவிகளைப் பறித்துள்ளதுடன், முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் படிப்படியாக நீக்கி, தேசிய பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்கி வருகிறார்கள்.

ஜே.வி.பி. அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க, அவர்களது மிகவும் மோசமான, எதிர்காலத்தில் நாட்டை பாசிச வழியில் இழுத்துச் செல்லக்கூடிய கருத்துக்களும் வெளிவந்திருக்கின்றன.

அதாவது, நாட்டில் பல கட்சிகள் இருக்கக்கூடாது என்றும், பாராளுமன்றத்தில் எதிர்கட்சி என்று ஒன்று அவசியமில்லை எனவும் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கருத்துக்களைத் தெரிவித்துள்ளதாக வெளிவரும் செய்திகள், “யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே!” என்ற அபாய அறிவிப்புகளாக உள்ளன.

அத்துடன், நாட்டில் தொழிற்சங்கங்கள் இருப்பது தேவையில்லாதது என, ஜே.வி.பி. தலைவர்கள் கருதுவது உண்மையா என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என சில தொழிற்சங்கங்கள் ஜே.வி.பி. அரசைக் கோரியிருப்பதும், வரப்போகும் பாசிச அபாயத்தின் சமிக்ஞையாகும்.

மக்களுக்கு பல பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்த பின்னர், அந்த மக்களின் தலைகளில் மண் அள்ளிப்போடும் ஜே.வி.பி. அரசின் செய்கை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. மக்களும் ஒருபோதும் இத்தகைய போக்கை அனுமதிக்க மாட்டார்கள்.

ஜே.வி.பி. அரசின் இத்தகைய போக்கை தடுத்து நிறுத்துவதற்கும், தாம் விட்ட தவறுக்கு பிராயச்சித்தம் தேடும் வகையிலும், மக்களுக்கு தற்பொழுது உடனடியாக உள்ள ஒரே வழி, நொவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையை வழங்காமல் இருப்பதுதான்.

அது சாத்தியப்படாது போயின், ஜே.வி.பி. அரசை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கான இன்னொரு ‘அரகலய’ போராட்டத்துக்குத் தயாராவதைத் தவிர மக்களுக்கு வேறு வழி இல்லை.

# படைத்தளத்தைப் புதுப்பிக்கும் பிரித்தானியா!




டியாகோ கார்ஸியா (Diego Garcia) என்பது இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள மொரிசியஸ் நாட்டுக்குச் சொந்தமான சாக்கோஸ் (Chagos) தீவுக்கூட்டங்களில் ஒன்று. இந்தத் தீவில் பிரித்தானியா உலகின் முதல்தர ஏகாதிபத்தியமாக கொடிகட்டிப் பறந்த காலத்திலிருந்து ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக படைத்தளம் ஒன்றை வைத்திருக்கிறது. அந்தப் படைத்தளத்தை புதுப்பிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை பிரித்தானிய அரசு சென்ற மாதம் (ஒக்ரோபர்) மொரிசியஸ் நாட்டுடன் செய்திருக்கிறது. பிரித்தானியா உலகின் முதல்தர ஏகாதிபத்தியம் என்ற அந்தஸ்தை இழந்துவிட்டாலும், இன்றைய முதல்தர ஏகாதிபத்தியமான அமெரிக்காவுக்காக இந்த ஒப்பந்தத்தைச் செய்திருக்கிறது.

*1968* இல் மொரிசியஸ் நாட்டுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட பொழுது டியாகோ கார்சியா தீவை மட்டும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனா எடுத்துக் கொண்டதைக் குறிப்பிட்ட தேவான பரபுரக்கட்சியின் தலைவர், இது இலங்கையின் நிலையை மேலும் மோசமாக்கியது என்றும், இன்று அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பானை உள்ளடக்கிய ‘குவாட்’ (Quad) அதன் நிலையை பலப்படுத்துகின்றது என்றும் தெரிவித்தார்.

அண்மையில் நடந்து முடிவடைந்த ரஷ்யாவின் ‘பிரிக்ஸ்’ மாநாட்டில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொள்ளத் தவறியமை குறித்து உவிந்து விஜேவீர வருத்தம் தெரிவித்தார். பலம் வாய்ந்த அணியுடன் இலங்கை இணைந்து செயற்பட முடியாத நிலையிலிருப்பதால், ஜனாதிபதி அந்த சந்தர்ப்பத்தை தவற விட்டிருக்கக் கூடாது.

அழிவுகரமான நவதாராளவாதக் கொள்கை திட்டங்களிலிருந்து நாட்டை காப்பாற்ற இடதுசாரி கட்சிகளும் தேசியவாத குழுக்களும் ஒன்றிணைய வேண்டும் என்று உவிந்து விஜேவீர கூறினார். ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தாக்கிய விஜேவீர, தேசிய மக்கள் சக்தி நவ தாராளவாதத்தை நோக்கி சாய்ந்திருப்பினும், சில இடதுசாரி சார்புடைய கொள்கைகளை கடைப்பிடிப்பதைப் பாராட்டினார். கையிலிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உண்மையான மக்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பை உருவாக்குவதில் தேவான பரபுர ஒரு பாத்திரத்தை வகிக்க விரும்புகின்றது. பிரச்சினைகள் மற்றும் சவால்களின் உணர்திறனை உணர்ந்த உண்மையான எதிர்க்கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான புதிய முயற்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ரஷ்யா மற்றும் சீனாவுடனான உறவுகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இயங்கிக் கொண்டிருக்கும் தெற்குலகின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதையும் இளம் அரசியல்வாதியான விஜேவீர வலியுறுத்தினார்.

(பூகோள அரசியலில்) துரிதமான மாற்றங்கள் இடம்பெற்று வருவதாகவும், மேற்கத்தைய சக்திகள் இலங்கை மீது அழுத்தத்தை அதிகரித்தால் யாரும் ஆச்சரியப்படத் தேவையில்லை என்று விஜேவீர கூறினார். ‘சோ.ஃபா’ (SOFA-Status of Forces Agreement: படைகள் நிலை உடன்படிக்கை) தொடர்பாக அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்கான சாத்தியம் உள்ளதாகவும், அதேபோல் இந்தியா சகல மட்டங்களிலும் தனது செல்வாக்கை அதிகரிக்க முயற்சிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடி தொடர்பாக கருத்துத் தெரிவித்த விஜேவீர, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகள் என்ன கூறினாலும், நாடு (இலங்கை) இன்னும் புதர்களில் இருந்து வெளியேறவில்லை என்று கூறினார்.

90 களில், பிரதான அரசியலுக்குத் திரும்பிய பின்னர், தேசியவாத கட்சிகள் மற்றும் குழுக்களை ஒன்றிணைப்பதற்கான ஜே.வி.பி.யின் முயற்சிகளை சோமவன்ச அமரசிங்க எவ்வாறு படிப்படியாக வழி நடத்தினார் என்பதை விளக்கிய விஜேவீர, பொதுவானதொரு வேலைத்திட்டத்தில் ஐ.தே.க.வுடன் ஒருமித்த கருத்தை எட்டியதற்காக கட்சியின் மீது குற்றம் சாட்டினார். இங்கே, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, அதாவது தேசிய மக்கள் சக்தி உருவாக்கப்படுவதற்கு முந்தைய 2009-2019 காலப்பகுதியை விஜேவீர (நினைவுகூர்ந்து) குறிப்பிடுகிறார்.

பொதுத் தேர்தலில் வாக்களிக்க 17.1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தகுதி பெற்றுள்ளதாக உவிந்து விஜேவீர கூறினார். ஜனாதிபதித் தேர்தலில் 3.5 மில்லியன் அல்லது தகுதியான வாக்காளர்களில் கிட்டத்தட்ட 1/5 பேர் வாக்களிக்கவில்லை என்று தெரிவித்த அவர், மக்கள் தங்கள் வாக்குகளை வீணடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

(இக்கட்டுரை The Island பத்திரிகையில் 06.11.2024 அன்று வெளியானது)

**தமிழில்: வானவில்**

---

**14ம் பக்கத்தொடர்ச்சி...**

சாகோஸ் தீவுக் கூட்டத்திலிருந்து பிரித்தெடுத்து பிரித்தானியா தன்வசம் வைத்துக் கொண்டது. உலக வரைபடத்திலும் அந்தத் தீவு பிரித்தானியாவின் இறைமையுள்ள ஒரு பிரதேசம் என்றே குறிப்பிட்டு வரப்படுகின்றது.

மொரிசியஸ் நாடு முதலில் 18ஆம் நூற்றாண்டில் பிரான்சால் அதன் கொலனியாக கைப்பற்றப்பட்டது. பின்னர் அது பிரித்தானியாவின் கொலனியாக மாறியது. பிரித்தானிய கொலனியாக மாறிய பின்னர் அங்கு வாழ்ந்து வந்த பூர்வகுடி மக்கள் பலவந்தமாக அருகிலுள்ள மொரிசியஸ் மற்றும் சிசிலி நாடுகளுக்கு விரட்டப்பட்டு, அங்கு பிரித்தானிய படைத்தளம் ஒன்று நிறுவப்பட்டது. அன்றிலிருந்து அங்கு வாழ்ந்து வந்த அந்தத் தீவுக்குச் சொந்தமான குடிமக்கள் தமது நிலத்தை மீட்டெடுக்கும் சுயநிர்ணய உரமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

1966 இல் இந்தத் தீவை பிரித்தானியா 50 வருடக் குத்தகைக்கு அமெரிக்காவுக்கு வழங்கியது. அந்தக் காலகட்டம் 2016இல் காலாவதியான போது குத்தகை ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இந்தத் தீவில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்தில் இருந்தே அமெரிக்காவின் B - 1, B - 2, B - 52 போர் விமானங்கள் பறந்து சென்று ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களில் ஈடுபட்டன. இந்தத் தளத்திலேயே அமெரிக்கா ஆரம்பத்தில் தனது ஆளில்லா ‘ட்ரோன்’ (Drone) விமானங்களின் வெள்ளோட்ட பயிற்சிகளையும் நடத்திப் பார்த்தது.

இந்தத் தீவை மீண்டும் மொரிசியஸ் நாட்டிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச நீதிக்கான நீதிமன்றம் (International Court of Judtice) வழங்கிய தீர்ப்பையும் பிரித்தானியா உதாசீனப்படுத்தி நடந்து வருகிறது.

இந்தத் தீவை மீண்டும் மொரிசியஸ் நாட்டிடம் ஒப்படைப்பதானால், 99 வருடக் குத்தகைக்கு அதை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை சமீபத்தில் தற்போதைய பிரித்தானியப் பிரதமர் கெய்த் ஸ்ராமர் (Keith Starmer) விதித்துள்ளார்.

அமெரிக்கா சீனாவை சுற்றி வளைப்பதற்காகவும், மேற்கு ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும், வகுத்துள்ள இந்தோ – பசுபிக் போர்த்திட்டத்தில் டியாகோ கார்ஸியா தளம் ஒரு முக்கியமான கேந்திரத்தில் அமைந்திருப்பதால், இந்தத் தீவின் மண்ணின் மைந்தர்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் வெற்றி கைக்கு எட்டும் தூரத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

**–வரதன்**

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# தேசிய மக்கள் சக்திக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பது ஆபத்தானது !

**-ரோஹண விஜேவீரவின் மகன் எச்சரிக்கை**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு (National People's Power - NPP) அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் அது அரசியல் ரீதியாக பேரழிவை ஏற்படுத்தும் என தேவான பரபுர (Devana Parapura - DP) கட்சியின் பொதுச் செயலாளர் உவிந்து விஜேவீர (Uvindu Wijeweera) தெரிவித்துள்ளார்.

எனவே, தேசிய மக்கள் சக்தி 2/3 பெரும்பான்மையைப் பெற்றால் ஏற்படும் விளைவுகளை வாக்காளர்கள் சிரத்தையில் கொள்ள வேண்டும் என்று குருநாகல் மாவட்ட வேட்பாளரான உவிந்து விஜேவீர கூறினார்.

எதிர்க்கட்சிகளின் தோல்வியில் ஒரு பாரிய பாராளுமன்ற அதிகாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் முழுமையான பிரச்சாரம் குறித்து, ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) ஸ்தாபகத் தலைவர் மறைந்த ரோஹண விஜேவீரவின் புதல்வர், உவிந்து விஜேவீரவிடம் 'தி ஐலண்ட்' பத்திரிகை அவரது கருத்துக்களைக் கேட்டபோது இவ்வாறு கூறினார்.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 5/6 பாராளுமன்ற பெரும்பான்மையை வென்றதை அடுத்து, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன பின்பற்றிய அரசியல் கொள்கைத் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், இதேபோன்ற நிலைமையை நாடு தாங்கிக் கொள்ள முடியாது என்று விஜேவீர வலியுறுத்தினார்.

ரோகண விஜேவீர 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் இலங்கை அரசாங்கப் படைகளின் காவலில் இருந்தபோது கொல்லப்பட்டார்.

மிரிஹான பாங்கிரிவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்திற்கு வெளியே, மார்ச் 31 அன்று தொடங்கப்பட்ட மக்கள் எதிர்ப்பு பிரச்சாரம் வெடிப்பதற்கு பல வாரங்களுக்கு முன்பாக, 2022 ஆம்



ஆண்டு பெப்ரவரி பிற்பகுதியில் தேவான பரபுர (டி.பி) கட்சி தேர்தல் ஆணையத்தின் (Election Commission) அங்கீகாரத்தைப் பெற்றது. தேவான பரபுர கட்சியின் அலுவலக பொறுப்புகளைச் சுமக்கும் 15 பேர் கொண்ட உறுப்பினர்களின் வரிசையில், ஒப்பீட்டளவில் இளைஞரான உவிந்து விஜேவீர மூன்றாவது இடத்தில் உள்ளார்.

**ஷாமிந்திரா ஃபெர்டினாண்டோ**
**(Shamindra Ferdinando)**

தூய்மையான பாராளுமன்றமொன்றிற்கு வழி வகுக்க, ஊழல் அரசியல்வாதிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற தேசிய மக்கள் சக்தியின் அறிவிப்பில், தனது கட்சி தவறெதனையும் காணவில்லை என்று தேவான பரபுரவின் பொதுச் செயலாளர் கூறினார். ஆனால், புதிய மற்றும் பழைய அரசியல் கட்சிகளில் இருந்து இம்முறை ஏராளமான புதுமுகங்கள் தேர்தல் களத்தில் குதித்து இருப்பதால், தேசிய மக்கள் சக்தியினரை மட்டுமே தேர்ந்தெடுக்க வாக்காளர்களை வற்புறுத்துவது என்பது நியாயமானதாக இருக்காது என்று அவர் தெரிவித்தார்.

'புதியவர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படட்டும்' என்று கூறிய விஜேவீர, தேசிய மக்கள் கட்சியின் வாய்வீச்சால் திசை திரும்ப வேண்டாம் என்று வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் நடந்து முடிந்த எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் டி.பி (DP) போட்டியிட்டது. "அந்த சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 30 பேரில் எங்களால் ஓர் ஆசனத்தைக்கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளின் அழிவை தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கக்கூடாது என்பதை வாக்காளர்கள் திட்டவட்டமாக அறிவித்தார்கள்" என்று விஜேவீர கூறினார். அதாவது தேசிய மக்கள் சக்திக்கும் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் தலா 15 ஆசனங்கள் வீதம் 30 இடங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை, அரசாங்கம் எதிர்பார்த்த வழியில் பொதுத் தேர்தல் நடக்காது என்பதை நிரூபித்துள்ளது.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த உவிந்து விஜேவீர, வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் டி.பி போட்டியிடுவதாகக் கூறினார். "எனினும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கான எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எனவே, 17 மாவட்டங்களில் நாங்கள் களத்தில் இருக்கின்றோம். அனைவருக்குமான நீதிக்கான ஜே.வி.பி.யின் போராட்டத்தில் இன்னமும் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எங்களுக்கு ஆதரவாக தங்களது வாக்குரிமைகளைப் பயன்படுத்துவார்கள் என நாங்கள் நம்புகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

இந்தியாவை உள்ளடக்கிய அமெரிக்க தலைமையிலான குழுவுக்கும் சீனாவிற்கும் இடையில் நடந்து வரும் மேலாதிக்கத்திற்கான போட்டியானது, வங்குரோத்தடைந்துள்ள இலங்கையை மிகவும் கடினமான சூழ்நிலையில் வைத்துள்ள அதேநேரத்தில், நாடு (இலங்கை) வெளிநாட்டு சக்திகளால் இரக்கமின்றி சுரண்டப்படுகின்றது என்று உவிந்து விஜேவீர கூறினார்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**